# மின்கதிர்

CITEE

விலை ரூ 5/ பிப்ரவரி 2013













து. கோவிந்தராஜு

புத்தகங்கள் பல தனி மனிதர்களின் பல தேசங்களின் வாழ்க்கையை தலை கீழாக புரட்டி போடும் வல்லமை வாய்ந்தது. பண்டுதொட்டு பழகி வந்த செவிவழிச் செய்திகள் மொழியின் உதவியாய் வரி வடிவம் பெற்று புத்தகமாக உலகம் முழுவதும் உலாவந்து கொண்டிருக்கிறது.

செல்லும் வழியெல்லாம் செழுமையை விளைவிக்கும் நதியைப் போல, புத்தகம் வாசிக்கும் மனிதனை வலிமை யுடையவனாக மாற்றுகிறது.

உலக அளவில் - ஒப்பீட்டளவில் இன்னும் இந்தியாவில் வாசிப்போர் எண்ணிக்கை குறைவுதான். ஒவ்வொரு மனிதனும் தனது வருமானத்தில் 8 சதவீதம் அளவில் செலவு செய்து புத்தகங்கள் வாங்க வேண்டும் என்பது ஒரு வழிகாட்டும் நெறியாக உள்ளது.

தமிழக மக்களின் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் தென்னிந்திய புத்தக விற்பனை யாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் ஆண்டு தோறும் சென்னையில் புத்தக கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்தாண்டும் (2013) சென்னையில் 36 வது புத்தக கண்காட்சியை 11.1.2013 அன்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் எம்.ஆர். சிவபதி அவர்கள், ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி மைதானத்தில் துவக்கிவைத்தார்.

13 தினங்கள் நடைபெற்ற புத்தக கண்காட்சியை 9 லட்சம் வாசகர்கள் பார்வையிட்டதாகவும் பல்லாயிர கணக்கில் பல்வேறு தலைப்பிலான புத்தகங்கள் சுமார் 10 - 12 கோடி ரூபாய் அளவிற்கு விற்கப்பட்டுள்ளதாகவும் பாபசி சங்கத்தின் தலைவர் ஆர்.எஸ். சண்முகம் தெரிவித்துள்ளார்.

இந்தாண்டு தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்கள், ஜப்பான், மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்ப் பதிப்பாளர்கள், ஆங்கில பதிப் பாளர்கள் மற்றும் ஊடக பதிப்பாளர்கள் என 450 பங்கேற்பாளர்கள் இக் கண்காட்சி யில் அரங்கம் வைத்தனர்.

5 லட்சம் தலைப்புகளில் சுமார் 1 கோடிக்கும் அதிகமான அளவில் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தது.

அனைத்து நாட்களிலும் மாலையில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. அரசியல் தலைவர்களும், தமிழ் அறிஞர் களும் அழைக்கப்பட்டு குறிப்பிட்ட தலைப்பில் நின்று பேசுமாறு பாபசி (புன்னகை) அரசியல் தலைவர்களின் இலக்கிய முகத்தை அனைத்து மக்களும் அறியச் செய்தது. இடதுசாரி இயக்கத்தின் மூத்த தோழர் நியூ செஞ்சரி புக் ஹவுஸ் சார்பில் வெளியிடப்பட்டு இந்தாண்டு சாகித்ய அகடமி விருது பெற்ற நாவல் தோல், அதன் ஆசிரியர் டி.செல்வராஜ் ஆகிய இருவரையும் அறிமுகப்படுத்தி பேசி நடத்திய 18.1.2013ல் கருத்தரங்கம் இந்தாண்டு புத்தக கண்காட்சியின் மறக்க முடியாத மணிமகுட நிகழ்ச்சியாகும்.

அதிலும் தோல் நாவல் உருவான வரலாறு அதில் இடம்பெற்றுள்ள 117 கதாபாத்திரங்கள் அவர்கள் இன்னும் திண்டுக்கல் மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள் என்று சாகித்ய அகாடமி விருது பெற்ற தோழர் டி. செல்வராஜ் பேசியது மனதை வருடுகிற நிகழ்ச்சியாகும்.

கம்யூனிஸ்ட்டுகள் துவக்ககால போராட்ட முறையை கையெடுக்க வேண்டும் என்னும் தோழர் டி. செல்வராஜ் கூறி யிருப்பதும் இக்கால இளம் தோழர்கள் மனதில் கொள்ள வேண்டியதாகும்.

அதே போல 20.1.2013 அமர்வில் திரு. வை.கோ சொல்லாற்றல் எனும் தலைப்பில் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்ச் சொல்லின் மேன்மையை அரசியல் தவிர்த்து பேசியது அருமை.

மொழியின் பெருமையை - வாசிப்பின் தேவையை உணர்த்தும் வகையில் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் சென்னை புத்தக காட்சியை கண்டு, புத்தகம் வாங்குவோர் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு உயர்ந்து வருவது நல்ல அம்சம். இதனை மேலும் முன்னெடுத்து செல்வதில் நமது பங்கையும் செலுத்துவோம். கற்றலின் மேன்மையை உணருவோம், உணர்த்துவோம், உயர்வோம்.

தமிழ்நாடு மின்ஊழியர்
மத்திய அமைப்பின்
மாதஇதழ்
விலை ரூ. 5/-
பிப்ரவரி 2013

உள்ளே........


- திணிக்கப்பட்ட போராட்டங்களை வெற்றி பெறச் செய்வோம் வாரீர்.
- மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை...
- இந்தியாவின் நீர்வளக்கொள்கை
- அரிசி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும்....
- மான்யங்களின் உண்மை நிலை என்ன உங்கள் பணம் உங்கள் கையில்
- ஆதலினால் காதல் செய்வீர்...
- வெனிசுலாவில் நடைபெற்ற உலக எரிசக்தி தொழிலாளர் மாநாடு
- பாலியல் வன்முறைகள் அரசியல் - ஆன்மீகவாதிகள்...


ஆசிரியர் குழு
எஸ்.எஸ். சுப்பிரமணியன்
(ஆசிரியர்)
கே. விஜயன்
எம்.வெங்கடேசன்
ஏ. அந்தோணி
எஸ். ராஜேந்திரன்
ஆ. கோவிந்தராஜு
கோ. மோகன்ராஜு
எம். தனலட்சுமி

ஆண்டு சந்தா ரூ. 50/-
ஆயுள் சந்தா ரூ. 500/-
தனிப்பிரிதி ரூ. 5/-

முகவரி
27, மசூதிதெரு,
சேப்பாக்கம்,சென்னை 5.

# திணிக்கப்பட்ட போராட்டங்களை வெற்றி பெறச் செய்வோம் வாரீர்!

தொழில் நகரமாம் கோவை மாநகரில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாடு மாற்றாறும் போற்றும் வண்ணம் சீறும் சிறப்புமாக நடைபெற்று முடிந்துள்ளது. மின் ஊழியர் மத்திய அமைப்பின் துவக்க நாளான நவம்பர் 20 இல் மின் ஊழியர் மத்திய அமைப்பின் நோக்கங்களை மின் நுகர்வோர், மின் ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக தமிழகம் முழுவதும் பிரச்சாரம், கொண்டு செல்லப்பட்டுள்ளது.

போராட்ட தியாகிகளை நினைவு கூறும் விதமாகவும், சென்ற மாநாடு நடைபெற்ற இடத்திலிருந்தும் ஜோதி, செங்கொடி ஆகியவைகள் தமிழகத்தின் 6 முனைகளிலிருந்தும் புறப்பட்டு மாநாடு நடைபெறும் கோவை மாநகரத்தை வந்தடைந்தது. ஜோதிகள் கொடி பயணமாக தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் நோக்கங்கள், தெருமுனை பொதுக்கூட்டங்கள் மூலமாக பிரச்சாரமாக கொண்டு செல்லப்பட்டது ஒரு சிறப்பம்சமாகும்.

மாநாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதிகள் பிரதிநிதிகளின் வருகை அவர்கள் நடத்திய விவாதம் அனைத்துமே மின் ஊழியர் மத்திய அமைப்பின் பாரம்பரியத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்ட பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்று அந்த பொதுக் கூட்டத்தில் மாநாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவான மின் நுகர்வோர், மின் வாரிய ஊழியர்களின் ஜீவநாதமாக விளங்கும் கோரிக்கைகளான.

- தமிழக மக்களின் தேவைக்கான மின்சாரத்தைப் பெற்று சமசீராக விநியோகம் செய்திடுக.
- சேவைத்துறையாம் மின் துறையில் ஆயிரக்கணக்கான ஆரம்பகட்ட காலி பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட.
- ஏறி வரும் விலைவாசி, உயர்ந்து நிற்கும் வாழ்க்கை

தரத்தை பராமரிக்க மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வை 1.12.2011 முதல் வழங்கிட பேச்சு வார்த்தையை துவங்கிடு.

- மின் நுகர்வோர்களுக்கும், மின் வாரிய ஊழியர்களுக்கும் எந்த வித பலனையும் விளைவிக்காத மின் வாரிய பிரிப்பை மறு பரிசீலனை செய்திடு.
- 10.8.2007 ஒப்பந்தத்தின் அடிப்படையில் மீதமுள்ள 11000 மஸ்தூர்களுக்கும் கள உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கிடு.
- கணினி பராமரிப்பு உட்பட கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்று
- மீதமுள்ள ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திடுக.
- கள உதவியாளர் காலி பணி இடங்களில் ஐ.டி.ஐ. படித்தவர்களை கொண்டு நிரப்பிடுக.
- நிரந்தரப்படுத்தப்பட்ட பகுதி நேர ஊழியர்களுக்கு போனஸ் உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் வழங்கிடுக.
- நிர்வாகப்பிரிவு, கணக்குப்பிரிவு, தணிக்கைப் பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றிடுக.
- போராடிப்பெற்ற ஓய்வூதியத்தை பாதுகாத்து, புதிய பென்சன் திட்டத்தை கைவிடச் செய்திடுக.

என்பன போன்ற கோரிக்கைகளின் மீது அரசின், வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் மாறுபட்ட போராட்ட வடிவமான 5.3.2013 அன்று 24 மணி நேர பெருந்திரள் கூட்டு முறையீடு என்று போராட்ட அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. நமது கோரிக்கைகள் வென்றடைய மாநாட்டு போராட்ட அறிவிப்பினை வெற்றி பெற செய்வோம்.

மின் வாரிய ஊழியர்களின், பொறியாளர்களின் கோரிக்கைகளை முன் வைத்து போராடுகின்ற இதே கால கட்டத்தில் மத்திய மாநில அரசுகள் கடை பிடிக்கும் மக்கள், தொழிலாளர் விரோத கொள்கையினால் மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாற்றப்பட்டுள்ளதை உணர்ந்த மத்திய தொழிற்சங்கங்கள், தொழில் வாரியான சம்மேளனங்கள் இணைந்து பல கோடி தொழிலாளர்கள் கலந்து கொள்ளக்கூடிய எழுச்சி மிகு போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் இந்த கால கட்டத்திலேயே விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் டீசல் விலை உயர்வை விற்பனையாளர்களே முடிவு செய்து கொள்ளலாம் என்ற அறிவிப்பினை செய்து விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதற்கு பதிலாக இறக்கை கட்டி பறக்கும் விலை வாசி உயர்வுக்கு வழிவகுத்துள்ளது.

நவீன தாராளமயக் கொள்கை அமலாக்கம் என்ற பெயரால் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் வளர்ச்சிக்கு வித்திடாமல், இருக்கின்ற வேலை வாய்ப்பை பறிக்கின்ற காரணத்தினால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழந்து வீதியில் தள்ளப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சமூக நலத்திட்டங்களை அமலாக்க நிதி திரட்டுகின்றேன் என்ற பெயரால் சதத்திரத்திற்கு பின்னர் இந்தியாவின் பொற்கோவில்கள் என்று சொல்லும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை ரூ. 40,000/- கோடிக்கு மேலும் விற்கும் நிலைக்கு மத்திய அரசு சென்றுள்ளது.

மத்தியில் ஆளும் அரசு, சேவைத்துறையில் தனக்குள்ள பங்கை, தட்டிக்கழித்து தனியாரிடம் தாரை வார்த்து தனியாரின் லாப வெறிக்கு பக்கபலமாக நின்று காசு உள்ளவனுக்கே விஞ்ஞான தொழில்நுட்ப பலன்களை அடையமுடியும், காசு இல்லாத சமுதாயம் கற்கால சமுதாயமாக மாற வேண்டும் என்ற திசை வழியை நோக்கி செல்லும் வழியாகத் தான் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்திட தனியாத தாகம் கொண்டு அலைகிறது.

நவீன தாராளமயக் கொள்கை அமலாக்கலின் அடிப்படையில் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெட்டிக் குறைப்பது, அவர்கள் செய்த பணிகளை தினக்கூலி, ஒப்பந்த, அவுட் சோர்சிங் முறையில் செய்ய வைத்து அவர்களின் உழைப்புச் சுரண்டலை பின்னுக்குத் தள்ளும் விதமாக குறைந்தபட்ச ஊதியம் ரூ. 10,000/- வழங்கிட வேண்டும். அந்த அடிப்படையில் தற்போது பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கான ஊதியம் அளித்திட வேண்டும்.

அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற ஊழியர்களின் சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அளிக்கின்ற ஓய்வூதியப் பலன்களை வெட்டிச் சுருக்குகின்ற வகையில் புதிய ஓய்வூதிய மசோதாவை நாடாளுமன்றத்தில் சட்டமாக்க முயற்சித்து வருகின்றது. இந்த பின்னணியில் புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு அனைத்து தரப்பினருக்கும் உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம் அளித்திட வேண்டும் என்று ஓங்கி குரல் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மக்களை, தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய கோரிக்கைகளை முன்வைத்து புதிய பொருளாதாரக் கொள்கை அமலாக்கம் துவங்கியதில் இருந்து பலகட்ட போராட்டங்களை நடத்திய மத்திய தொழிற்சங்கங்கள் தொழில் வாரியான சம்மேளனங்கள் போராட்டத்தின் தன்மையை மாற்றி அரசின் பிற்போக்குத் தனமான கொள்கைகளை பின்னுக்கு தள்ளுகின்ற வகையில் பிப்ரவரி 20 - 21 தேதிகளில் 48 மணி நேர வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

மத்திய தொழிற்சங்கங்கள் விடுத்துள்ள போரட்ட அறைகூவலை மின் அரங்கத்தில் அமலாக்கிட மின் ஊழியர் மத்திய அமைப்பு, தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யு.சி., ஐக்கிய தொழிலாளர் சங்கம், பாரதீய மஸ்தூர் சங்கம் போன்ற அமைப்புகள் இணைந்து கூட்டான வேலை நிறுத்த அறிவிப்பு, பிரச்சாரம் போன்றவைகளை நடத்திட திட்டமிட்டுள்ளது அதன் ஒரு அங்கமாக சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற நான்கு மையங்களில் மாநில தலைவர்கள் கலந்து கொள்ளக்கூடிய பிரச்சாரக் கூட்டங்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவைகளின் அடிப்படையில் மக்களின் வாழ்வாதாரத்தை தக்க வைக்க முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை மின் வாரிய ஊழியர்கள் பணியாற்றும் பட்டி தொட்டிகள், காடு மலைகளுக்கு சென்று மின் அரங்கத்திற்கே உரிய பாரம்பரிய குணத்தோடு பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை போராட்டக்களத்தில் பங்கெடுக்கச் செய்வோம் வாரீர்! என மத்திய அமைப்பின் மாநாட்டு பிரகடணத்தை நிறைவேற்றிடுவோம். வாரீர்! வாரீர்!!

*-எஸ்.எஸ். சுப்பிரமணின்*

# மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை

*விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்காதே, குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 10,000/- வழங்கிடு என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து பிப்ரவரி 20 - 21 தேதிகளில் நடைபெற உள்ள 48 மணி நேர வேலை நிறுத்தத்தில் மின் வாரிய ஊழியர்களும் கலந்து கொள்ள வேண்டும் என முடிவு எடுத்த மின் வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டான அறிவிப்பு.*

**ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எல்.பி.எப்., ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ்., பி.எம்.எஸ்.**

**மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு - தமிழ்நாடு**

அன்புடையீர்,

வணக்கம்

2012, செப்டம்பர் 4 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மத்திய தொழிற்சங்கங்களின் தேசிய மாநாட்டு முடிவின் அடிப்படையிலும், 7.12.2012 அன்று தமிழகத்தில் உள்ள மத்திய தொழிற்சங்கங்களின் மாநில கருத்தரங்கின் முடிவின் அடிப்படையிலும் மத்திய தொழிற்சங்கங்கள் வரையறுத்த 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 2013 பிப்ரவரி 20, 21 -ல் 48 மணி நேர வேலை நிறுத்தத்தை மின் அரங்கத்தில் கொண்டு செல்வதற்கான ஆயத்தக்கூட்டம் 17.01.2013 அன்று மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள சி.ஐ.டி.யு. சங்க அலுவலகத்தில் சம்மேளன பொதுச் செயலாளர் தோழர் வி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எல்.பி.எப்., ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ்., பி.எம்.எஸ். ஆகிய அமைப்புகளின் மாநில தலைவர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுடெல்லியில் 4.9.2012 அன்று நடைபெற்ற அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்வாரி சம்மேளனங்களின் தேசிய மாநாட்டு தீர்மானமான 2013 பிப்ரவரி 20, 21 ஆகிய தேதிகளில் 48 மணி நேர வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வது என்ற தீர்மானத்தை இக்கூட்டம் ஏற்றுக்கொள்கிறது.

2012 பிப்ரவரி 20, 21 ஆகிய தேதிகளில் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு உருவாக்கப்பட்ட அனைத்து தொழிற்சங்கங்கள், வங்கி, காப்பீடு, பாதுகாப்பு, நிலக்கரி, மின்சாரம், போக்குவரத்து, மத்திய - மாநில அரசு பணியாளர்கள் உள்ளிட்ட தொழில்வாரி சம்மேளனங்களின் கருத்தொற்றுமைமிக்க கோரிக்கைகளாவன...

- கட்டுக்கடங்கா விலைவாசியை கட்டுப்படுத்து,
- வேலை பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, தொழிற் முனைவோருக்கு சலுகைகள் அளித்திடுக,
- மத்திய மாநில பொதுத்துறை (மின்சாரத்துறை உட்பட) பங்குகள் விற்பதை தடுத்து நிறுத்திட,
- பொதுத்துறை நிறுவனங்களை (மின்சாரத்துறை உட்பட) பொதுத்துறையாகவே பாதுகாத்திட,
- முறைசாரா, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தேவையான நிதியை ஒதுக்கிடுக,
- போனஸ் உச்சவரம்பு நீக்குவது மற்றும் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டியை உயர்த்தி அளித்திட,
- குறைந்தபட்ச கூலிச்சட்டம் திருத்தப்பட்டு, குறைந்தபட்ச ஊதியம் ரூ. 10,000/- வழங்கிட,
- தொழிற்சங்கங்கள் விண்ணப்பித்த 45 நாட்களுக்குள் கட்டாயமாக சங்கங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற ஐ.எல்.ஓ. இணக்க விதியை அமலாக்கிட,
- அனைத்து தரப்பினருக்கும் உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம் அளித்திட,
- நிரந்தரத் தன்மை வாய்ந்த பணிகளில் ஒப்பந்த முறை அமலாக்கத்தை தடுத்திட,
- தற்போது பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளிகளுக்கு நிரந்தரத் தொழிலாளிகளுக்கு உள்ள ஊதிய

விகிதத்திலேயே ஊதியம் அளித்திட

இக்கோரிக்கைகளை முன் வைத்து டிசம்பர் 18, 19 தேதிகளில் நாடு முழுவதும் மறியல் போராட்டமும், டிசம்பர் 20 அன்று பல லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்ற புதுடெல்லி பேரணியும் நடைபெற்றுள்ளது.

எனினும் மத்திய அரசு இக்கோரிக்கைகளின் மீது எந்தவித அக்கறையும் செலுத்தாததோடு இவைகளை நிராகரிக்கும் போக்கை தொடர்ந்து பின்பற்றி வருகிறது.

10 அம்ச கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்தும் விதமாக 2013 பிப்ரவரி 20, 21 -ல் 48 மணி நேர வேலை நிறுத்தம் நாடு முழுவதும் நடைபெற உள்ளது. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் மின் வாரிய ஊழியர்களும் பங்கு பெறுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போராட்டம் வெற்றிபெற மாவட்ட ரீதியாக கூட்டுக் குழுக்கள் அமைத்து பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

ஏ.ஐ.டி.யு.சி
பொதுச் செயலாளர்

சி.ஐ.டி.யூ
பொதுச் செயலாளர்

எல்.பி.எப்
பொதுச் செயலாளர்

ஐ.என்.டி.யு.சி
பொதுச் செயலாளர்

எச்.எம்.எஸ்
பொதுச் செயலாளர்

பி.எம்.எஸ்
பொதுச் செயலாளர்

## தோஹா மாநாடு - வளர்ந்த நாடுகளின் பிடிவாதம்

பருவ நிலை மாற்றங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கான ஐ.நா. திட்டத்தின் கீழ் வளரும் நாடுகளின் 18வது மாநாடு அன்மையில் தோஹாவில் நடைபெற்றது. மாநாட்டில் பேச்சு வார்த்தைகள் விடிய, விடிய நடைபெற்றபோதும் மாற்றங்கள் ஏதுமின்றி மாநாடு முடிவடைந்தது.

1997 இல் ஜப்பான் நாட்டின் வாயுக்களின் வெளியீட்டை கட்டுப்படுத்த உலக நாடுகளிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் காலக் கெடுவை மேலும் எட்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதாக எடுக்கப்பட்ட முடிவைத் தவிர வேறு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

வாயுக்களின் வெளியீட்டை கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா தலைமையில் வளர்ந்த நாடுகள் போட்டு வரும் முட்டுக்கட்டைகள் தொடர்கின்றன. கார்பன் வெளியீட்டை கட்டுபடுத்துவதில் எல்லா நாடுகளுக்கும் பொறுப்பு உண்டு என்றாலும், வளர்ந்த நாடுகளுக்கு கூடுதல் பொறுப்பு என்ற பொதுவான கோட்பாட்டை அமெரிக்கா தொடக்க முதலே எதிர்த்து வருகின்றன.

வளர்ந்த நாடுகள் 2020க்குள் 1990 லிருந்த நிலைமையிலிருந்து 23 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் மாநாட்டின் வரையறுப்பு. ஆனால் வளர்ந்த நாடுகள் 18 சதவீதத்தை மட்டுமே குறைத்துள்ளன.

அமெரிக்கா தலைமையில் வளர்ந்த நாடுகளின் பிடிவாதம் தொடர்கிறது. இதனால் பருவநிலை மாற்றங்களில் தேவையான அளவு கார்பன் வெளியீட்டை குறைக்க முடியாமல் போவது மட்டும் அல்லாமல், கார்பன் அளவை குறைக்க எதிர்ப்பு தெரிவிக்கும் நாடுகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே செல்லும் அபாயம். இதனால், இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகள் கார்பன் அளவை குறைக்க எடுக்கும் முயற்சிகளை பிரேசில், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் எதிர்க்கும் நிலை ஏற்படுகின்றது.

பருவ நிலை மாற்றங்களினால், ஏற்படும் பாதிப்புகளிலிருந்து வளரும் நாடுகளின் நலனை பாதுகாக்க 23 நாடுகளைக் கொண்ட வேறொரு புதிய கூட்டணி உருவாகி உள்ளது. இதில் இந்தியா, சீனா, அல்ஜீரியா, அர்ஜென்டினா, பொலிவியா, கியூபா, காங்கோ, டொமினியா, ஈக்குவடார், எகிப்து, எல்சார்வடார், ஈரான், ஈராக், குவைத், மலேசியா, மாலி, நிகரகுவா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சவூதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, வெனிசுலா போன்றவைகளாகும். பருவ நிலை மாற்றங்கள், பற்றி பேச்சு வார்த்தை தொடர்வதற்கும், அதில் வளரும் நாடுகளின் நலன்களில் பாதுகாக்க தேவையான அழுத்தத்தை இந்த கூட்டணி கொடுக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

**தொகுப்பு: எஸ். எஸ். சுப்பிரமணியன்**

# இந்தியாவின் நீர்வளக் கொள்கை

**கே. விஜயன்**

நீர் என்பது இயற்கையில் கிடைக்கும் ஒன்றாகும். மனிதகுலத்தின் வாழ்க்கைக்கு, விலங்குகளுக்கும் உணவுப்பாதுகாப்புக்கும் நீர் என்பது அத்தியாவசியமான ஒன்று இந்தியாவில் உள்ள 117 கோடி மக்கள் உலகத்தின் மக்கள் தொகையில் 17 சதவீதம் ஆகும். இந்தியாவின் நீர்வளம் உலகத்தின் நீர்வளத்தில் 4 சதவீதமானது மொத்த உலகப்பரப்பில் 28 சதவிதத்தில் உள்ளது.

இந்தியாவில் பெறப்படும் 4000 பில்லியன் கன மீட்டர் தண்ணீரானது ஆறு குளம் மூலம் ஆவியாகுதல் போக 1869 பில்லியன் கன மீட்டர் தண்ணீர் மட்டுமே கிடைக்கின்றது. அதிலும் 1123 பில்லியன் கன மீட்டர் தண்ணீர் மட்டுமே பயன்பாட்டுக்கு வருகின்றது. (1 கன மீட்டர் 1000 லிட்டர் தண்ணீர் ஆகும்)

நகர மயமாதல், தொழிற்சாலைக்கு பயன்படுத்துதல் விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் தேவை என்பது கூடுதலாகிக் கொண்டே வரும் பொழுது நமக்கு கிடைக்கும் தண்ணீரின் அளவு குறைந்தது வருகின்றது.

எதிர்காலத்தில் இந்தியாவில் தண்ணீர் என்பது ஒரு பிரச்சினையாக மாறும் நிலைக்கு கீழ்க்கண்ட காரணங்களும் உள்ளன.

சுற்றுப்புறச்சூழலில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக பருவநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு மழையின் அளவு குறைந்து கொண்டே போகுதல் அல்லது பெருமளவில் மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டு நீரை சேமித்து வைக்கமுடியாத நிலையும் உள்ளது.

அதேபோன்று பூமிக்கடியில் கிடைக்கும் நீரை தொழிற்சாலைகள் பயன்படுத்துவதன் காரணமாக கடல் நீர் உள்ளே புகும் நிலை ஏற்பட்டு வருகின்றது.

இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு நீர்வளக் கொள்கையை கொண்டு வர வேண்டுமென்று மக்களின் வாழ்நிலையை முன்னேற்ற வேண்டுமென்று விரும்புபவர்கள் மத்திய அரசினை வலியுறுத்தி வந்துள்ளனர். தற்போது மத்திய அரசு நீர்வளக் கொள்கையை வகுத்துள்ளது.

இதனால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பிரச்சினை என்பது தொடர்ந்து நீடிக்கின்றது.

மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்குள்ளும் நதி நீர்ப் பங்கிடுகள் தொடர்ந்து தீராத ஒன்றாக உள்ளது.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் கழிவுகளினால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய சுத்தமான நீர் என்பது மாசுபட்டுக் கொண்டே வருகின்றது.

நகரமயமாக்குதலின் காரணமாக வீடுகளில் வெளியேற்றப்படும் கழிவு நீர் பிரச்சனையும் காரணமாக அமைகின்றது.

இது போன்ற பல்வேறு பிரச்சினைகளினால் மக்களுக்கு தேவையான நீர் கிடைக்காத நிலை இந்தியாவில் உருவாகி வருகின்றது.

இந்நிலையில் வீடுகளுக்கு, விவசாயத்திற்கு, அனல், புனல், அனைத்திற்கும் நீர் தேவைப்படும் பொழுது அவைகளின் பயன்பாடு அளவோடு இருக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

எனவே தயாரிக்கப்பட்ட நீர் வளக் கொள்கை கீழ்க் கண்டவைகளை உள்ளடக்கியதாக உள்ளது.

- நீர் கிடைக்கும் அளவினை வெளிப்படுத்தும் விபரங்கள் அடங்கிய வலைத் தளம் உருவாக்கப்பட வேண்டும்.
- கிடைக்கும் நீரையும் மறு சுழற்சி செய்யப்படும் நீரையும் முழுமையாக பயன்படுத்தும் ஏற்பாடு.
- மனிதர்கள் குடியேற்றதினால் ஏற்படும் சுற்றுப்புறுச் சூழல் பாதிப்புகள் அளவிடுதல்.
- நீரைத் தேக்கிவைக்கும் அணை மற்றும் நீராதாரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான வழிகாட்டுதல்
- நீர் ஒதுக்கீடு செய்வதில் முதலில் குடிநீர், அதன் பின்னர் விவசாயம், நீர் மின்சாரம், நீர் வழிப்பாதை தொழிற்சாலைகள் மற்றும் இதர பயன்பாட்டிற்கு இருத்தல் வேண்டும்.
- பூமிக்கடியில் பயன்படுத்தும் நீரை பயன்படுத்துவதை ஒழுங்கிற்கு கொண்டு வருவது.
- பூமிக்கு மேல் கிடைக்கும் தண்ணீரையும் பூமிக்கடியில் உள்ள தண்ணீரை பயன்படுத்துவதையும் சிறுவிவசாயிகளுக்கும் விவசாயிகளின் நலனுக்கும்

முறைப்படுத்துவது.

- இதற்காக சுகாதார நடவடிக்கையை முன்னிறுத்தி இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச அளவிலான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வீடுகளுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடு.
- விவசாயிகளுக்கும், மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு அளிக்கும் மான்யத்தை குறைத்தல்.
- நீர் ஒழுங்குமுறை ஆணையம் ஏற்படுத்துதல்.
- ஆற்றின் கரையோரங்களை பலப்படுத்துவது
- நீரையை உபயோகப்படுத்துபவர்களின் கூட்டு அமைப்புகளுக்கு. நீரைப் பங்கீடு செய்யும் அதிகாரத்தை வழங்குதல்
- மறுவாழ்வு மற்றும் மீள் குடியிருப்பு செய்பவர்களிடம் நீரின் பயன்பாட்டுக்கான தொகையை பெறுவது.
- நீர் வழங்குவதில் நகரத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசங்களை குறைப்பது என்பதாகும்.

ஆனால் நீர்வளக் கொள்கையினால் பயனடையப் போவது யார் என்பது அமுலுக்கு வரும் போது தெரியும்?.

# ரூ. 10,000 குறைந்தபட்ச சம்பளத்தின் நியாயம்

பிப். 20,21 தேதிகளில் நடைபெறும் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று பணி செய்கின்ற அனைவருக்கும் குறைந்தபட்ச சம்பளமாக ரூ. 10,000 அளிக்க வேண்டிய ஒன்றாகும். அக்கோரிக்கை கடந்த செப்டம்பர் மாதம் டெல்லியில் நடைபெற்ற இந்தியாவில் உள்ள அனைத்து தொழிலாளர்களையும், மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் மற்றும் சம்மேளனங்கள் சார்பாக நிறைவேற்றப்பட்ட இக்கோரிக்கை கீழ்கண்ட அடிப்படை தன்மையோடு நிறைவேற்றப்பட்டது.

ஒரு தொழிலாளி ஆனவர் தனது சம்பாதியத்தில் நான்கு பேர் கொண்ட குடும்பத்தை காப்பாற்றுவதற்காக செலவு செய்யும் தொகையை 1999 - 2000 ஆம் ஆண்டில் தொழிலாளர் துறை எடுத்த ஆய்வின் படி கணக்கிடப்பட்டது. திட்டக்குழுவானது ஒரு மனிதன் வாழ்வதற்கு 2100 கலோரி (வெப்பசக்தி) தேவை என்றும். இதற்கு கீழாக உணவு உட்கொள்பவர்களை ஊட்டச்சத்து குறைவாக உள்ளவர்களாகக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்தது. நகரத்தில் அரசு எடுத்த ஆய்வின் அடிப்படையில் 2009 - 10 ஆம் ஆண்டில் 2100 கலோரி உணவை எடுத்துக் கொள்ள ஆகும் செலவு ரூ.2125 ஆகும். நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு ரூ. 8500 ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட நுகர்வோர் விலைவாசிப்புள்ளி அடிப்படையிலும் 12.5 சதவீத பண வீக்கத்தையும் கணக்கிலெடுத்துக்கொண்டால் ரூ.10758 மாதம்அளிக்க வேண்டும். 2012 - 13 ஆம் ஆண்டுகளில் இத்தொகையானது மேலும் என்பது உயரவே செய்யும். குறைந்தபட்ச ஊதியம் என்பது வறுமைக்கோட்டுக்கு சற்று மேலான ஒன்றாகும். அரசு நடத்திய 66 வது தேசிய அளவிலான எடுத்த புள்ளி விபரங்களின்படி தொழிலாளியானவர் மருத்துவ சிகிச்சைக்காகவும் மற்றும் இதர செலவுகளுக்காகவும் தன்னுடைய தின ஊதியத்தில் பெரும்தொகையை செலவு செய்கின்றார்.

இதனால் உணவுப்பொருள் வாங்கிச் சாப்பிடுவதில் குறைவு ஏற்பட்டு ஊட்டச்சத்து குறைவு ஏற்படுகின்றது. 74 சதவீதம் நகர்ப்புற தொழிலாளர்கள் வாழ்க்கை என்பது வறுமைக்கோட்டுக்கு சற்று மேல் தான் உயர்வானது. மாநிலங்களில் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஊதியம் என்பது மாதம் ரூ. 6000 அளவிலேயே உள்ளது. அது கூட கிடைக்காத பொழுது வறுமைக்கோட்டிற்கு கீழாக வாழவேண்டிய நிலை தொழிலாளர்களுக்கு உள்ளது. இதனால் தொழிலாளி மற்றும் அவரது குடும்பம் ஊட்டச்சத்து இன்றி வாழ்கின்றனர். திட்டக்குழு ஒரு பக்கம் ஒரு மனிதனுக்கு 2100 கலோரி வெப்ப சக்தி அளிக்கும் உணவு வேண்டும் என்று முடிவெடுத்து அறிவித்தாலும் அது கிடைப்பதற்கான வழி எதுவும் செயல்பாட்டில் இல்லை. அதற்கு பதிலாக திட்டக்குழு ரூ. 32 தினம் ஒரு தொழிலாளி செலவழித்தால் போதும் என்று சொல்கிறது. இப்படிச் சொல்லும் திட்டக்குழு தனது அலுவலகத்தின் கழிப்பறைகளை சீரமைத்து கேமரா பொருத்திட ரூ.30 லட்சம் செலவு செய்வது வெட்க கேடானது.

ஆதராம்: **ஓர்க்கிங் கிளாஸ்**

# அரிசி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் இந்தியாவில் ஒரு வேளை கூட உணவின்றி தவிக்கும் 40 கோடி மக்கள்

2012 ஆம் ஆண்டில் உலக அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது என்பது சில நாட்களுக்கு முன்னர் வந்த நாளிதழ் செய்தி. ஆனால் அரிசி ஏற்றுமதிக்கு அடித்தளமாய் உள்ள விவசாயிகளின் கதியோ அந்தோ பரிதாபம், இந்தியா அரிசி போன்ற உணவுப் பொருள்களின் ஏற்றுமதியில் முதலிடம் பிடித்தாலும் இந்திய மக்கள் தொகையில் சுமார் 40 கோடி மக்கள் ஒரு வேளை உணவின்றி உறங்க செல்லும் அவல நிலை.

உலகில் உள்ள 195 நாடுகளில் சில நாடுகள் தான் அரிசி ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளன. ஆசிய நாடுகள் தான் இந்த பட்டியலில் தலைமை வகிக்கின்றன. இந்தியா, தாய்லாந்து, வியட்நாம், பாகிஸ்தான், அமெரிக்கா, கம்போடியா, எகிப்து, உருகுவே, பிரேசில், மியான்மார், அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, சீனா, கயானா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், ரஷ்யா, துருக்கி, சிரியா, பெரு, வெனிசுலா, கஜகஸ்தான், உகாண்டா, தென் ஆப்பிரிக்கா, ஈக்குவடார், தான்சாஸியா, இலங்கை, கொரியா, மெக்சிகோ, தைவான் போன்ற நாடுகளே அரிசி ஏற்றுமதி செய்கின்றன.

உலக சந்தையில், ஆண்டிற்கு 3.5 கோடி டன் அரிசி விற்பனை செய்யப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் இந்தியா, 95 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்து உலக அரிசி ஏற்றுமதியாளர்கள் பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளது. 31 ஆண்டுகளாக உலக அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தை வகித்த தாய்லாந்தை பின்னுக்கு தள்ளி இந்தியா முதலிடத்தை பிடிக்க காரணமாக அமைந்தது. இந்தியாவின் அரிசி தரமாக உள்ளதாலும், குறைந்த விலையில் கிடைப்பதாலும், உலக அரிசி சந்தையில் முதலிடத்தை பெற முடிந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் இந்தியா அரிசி ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தையும், வியட்நாம் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் நான்காவது இடத்திலும், தாய்லாந்து முதலிடத்தையும் பெற்றிருந்த போதிலும், அரசு கையாண்ட கொள்கையில் ஏற்பட்ட சில பிரச்சனையின் காரணத்தால், 2011 ஆம் ஆண்டின் ஏற்றுமதியில் 3.5 சதவீதம் குறைந்து உலக அரிசி ஏற்றுமதியில் முதலிடம் வகித்த தாய்லாந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

இந்தியாவில் அஸ்ஸாம், மேற்கு வங்கம், பீகார், சத்தீஸ்கர், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரா, ஓரிசா, கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு போன்ற மாவட்டங்களில் நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. இது உலக அளவில் உற்பத்தி செய்யும் நெல்லின் அளவில் 20 சதவீதமாகும்.

தமிழகத்தில் சென்னையை தவிர இதர அனைத்து மாவட்டங்களிலும் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் சுமார் 30 லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள நீர் பிரச்சனையின் காரணத்தால், காவிரி டெல்டா மாவட்டங்களில், லட்சக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் காய்ந்து நெல் உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய நாடு முழுவதும் உள்ள விவசாயிகள், நீர் பற்றாக்குறை, உர தட்டுபாடு, உரத்திற்கு அளித்த மான்னியத்தை குறைத்தல், மின் பற்றாகுறை, இலவச மின்சாரம் பறிப்பு, மின் கட்டண உயர்வு போன்ற பல்வேறு இன்னலுக்கு இடையில் விளைவிக்கும் நெல்லை மிக குறைந்த விலையில் கொள்முதல் செய்து, அதிக விலைக்கு ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு, தாராளமயம் என்ற பெயரில் பல சலுகைகளை அளிக்கும் அரசாகத்தான் மத்திய அரசு உள்ளது.

மத்தியில் ஆளும் அரசுகள் கடைபிடிக்கும் தாராளமய கொள்கைகள், இந்திய விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் அமையாததோடு, இந்திய விவசாயிகளுக்கு பல இன்னல்களை உருவாக்கும் நிலையில் இருந்த போதும் கூட இந்தியாவில் மொத்த உணவு தானிய உற்பத்தி 25.74 கோடி டண்ணாக உள்ளது.

இந்தியாவில் உள்ள மொத்த மக்களுக்கு தேவையோ 5.50 கோடி டன் மட்டுமே தேவைக்கு அதிகமான உணவு தானிய உற்பத்தி இருந்த போதிலும் கூட, அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற உணவு, தானியங்களை முறையாக பராமரிப்பு செய்யாமல், மழையில் நனைந்து, வெய்யிலில் காய்ந்து, வீணடிக்கப்படுகின்றதே தவிர, நீதி மன்றங்கள், இப்படி வீணாகும் உணவு தானியத்தை வறுமையில், சக்தியின்றி வாடும் மக்களுக்கு இலவசமாக அளியுங்கள், என்று உத்திரவிட்ட பின்னரும், வீணாகும் உணவு தானியங்களை வழங்காத காரணத்தால் தான் இன்று இந்திய மக்கள் தொகையில் 40 கோடி மக்கள் ஒரு வேளை உணவு கூட இன்றி உறங்கச் செல்லும் அவல நிலை நீடிக்கின்றது.

உலக மக்களின் உணவுப் பொருளில் ஒன்றான அரிசி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் இந்தியா, இந்திய மக்களின் தேவைக்கு அதிகமான உணவு உற்பத்தி செய்த போதும், அரசு கடைபிடிக்கும் மக்கள் நலன் சாராத கொள்கையால், இந்திய மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் ஒரு வேளை உணவு கூட இல்லாமல் உறங்க செல்லும் நிலையை மாற்றும் போராட்டங்களில் ஈடுபட வேண்டிய கால கட்டத்தில் இந்திய மக்கள் உள்ளனர் என்பதுதான் இன்றைய எதார்த்த நிலை.

**எஸ். எஸ். சுப்பிரமணியன்**

# மான்யங்களின் உண்மை நிலை என்ன?
# "உங்கள் பணம் - உங்கள் கையில்"
# பணபட்டுவாடா திட்டம் மக்கள் வயிற்றில் அடிக்கும் திட்டம்

புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்ட 1990 ம் ஆண்டு முதல் பொருளாதார நிபுணர்கள், விரிவாக்க வல்லுநர்களிடம் மானியங்கள் தொடர்பான விவாதங்கள் துவங்கி நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழலில் உலக மயமாக்குதலின் செயல் திட்டங்களுக்கு பல துறைகள் ஆட்சியாளர்களால் திறந்து விடப்பட்ட நிலையில் உலகில் எந்த பகுதியில் வீழ்ச்சிகள் ஏற்பட்டாலும் இந்திய சந்தையில் தடுமாற்றங்கள் ஏற்படுவதும் அதனை காரணமாக வைத்து பன்னாட்டு நிறுவனங்கள் பல துறைகளிலும் இறங்கி அதிகளவு லாபம் சம்பாதிக்க வெளி நாட்டு நிர்பந்தங்களை தருவதும் தொடர் நடவடிக்கையாக மாறிவிட்டது.

இத்தகைய சூழலில் உயர்ந்து வரும் உணவுப் பொருட்களின் பண வீக்கம் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வுரிமைகளை பறித்து வரும் சூழலில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியங்களை வெட்டும் அறிவிப்புகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. மறு புறம் மானியங்களுக்கு ஒதுக்கப்படும் பல லட்சம் கோடிகளின் உண்மை நிலை பற்றி சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக உணவு, உரம் மற்றும் பெட்ரோலிய பொருட்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் மானியத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகின்றன. தற்போது பல சர்வதேச நிதி அமைப்புகளின் நிர்பந்தம், தேசத்தின் நிதி பற்றாக்குறை மற்றும் உயர்ந்து வரும் மானிய ஒதுக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு மானியங்களின் அளவை குறைப்பதற்கான அறிவிப்புகளாக மத்திய அரசு பல வகையான அறிவிப்புகளை நாள் தோறும் வெளியிட்டு வருகிறது.

மத்திய அரசு இந்த புத்தாண்டு முதல் நேரடி பணப்பட்டு வாடா திட்டத்தை துவங்கிடுவதாகவும் இத்திட்டம் ஆரம்பத்தில் இந்திய நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 43 மாவட்டங்களில் அமல்படுத்தப் படும் என்று அறிவித்து அது பின்னர் 20 மாவட்டங்களாக குறைக்கப்பட்டது. அதுவும் மத்திய அரசின் விதவைகளுக்கான ஓய்வூதியங்கள், தலித் / பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினருக்கான கல்வி உதவிப்பணம் வழங்குவது போன்ற தெரிவு செய்யப்பட்ட 26 மத்திய திட்டங்களுக்கு மட்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

"உங்கள் பணம், உங்கள் கையில்" என்று பொருள்படும் " ஆப்கா பைசா, ஆப் கே சாத்" என்ற முழுக்கத்தை மத்திய அரசு அறிவித்திருந்தது இந்த அறிவிப்பு 2014 பொதுத் தேர்தலை மனதில் கொண்டு, மக்களுக்கு லஞ்சம் கொடுப்பது போல தோன்றுவதான விமர்சனங்கள் எழுந்தவுடன் தெரிவு செய்யப்பட்ட 26 மத்திய திட்டங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. ஆனால் இத்திட்டம் குறித்து இது வரையிலும் நாடாளுமன்றத்தில் சட்டம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இத்திட்டத்தின் படி பணமாற்றல்கள் பயனாளிகளின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்பட உள்ள நிலையில் இந்தியாவில் இன்றைய நிலையில் கிராமப்புறப் பகுதிகளில் சுமார் 32,000 வங்கிக் கிளைகள் தான் இருக்கின்றன. இது நாட்டில் உள்ள 6 லட்சம் கிராமங்களில் சுமார் 20 சதத்திற்கும் குறைவான நிலையிலேயே உள்ளது.

இவ்வாறு வங்கிகள் இல்லாத நிலையில் கிராமங்களுக்கு வங்கிச் சேவைகளை எடுத்துச் செல்ல "வங்கி தொடர்பாளர்கள்" அளிக்கப்பட வேண்டும் என்றும் நிலைக்குழுவில் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

பணப்பட்டுவாடா திட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்கத்தின் மானியங்களைக் குறைத்து விடும் பொருட்களின் விலைகள் உயரும். ஆனால் மக்கள் தாங்கள் பெறும் மானிய ரொக்க பணத்தின் மூலம் வாங்கும் பொருட்களின் அளவை அவர்களாக குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். ஏனெனில் மான்யத்துடன் கூடிய உணவு தானியங்களை வெளியில் வாங்கும் போது அவற்றின் விலை அதிகமாகவே இருக்கும்.

ஆட்சியாளர்கள் தங்களுடைய நிதிப் பற்றாக்குறையை சரிகட்ட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி நவீன தாராளமய யுகத்தில் ஆட்சியாளர்கள் சமூக நல திட்டங்கள் அனைத்தையும் தனியாரிடம் தாரை வார்க்க துணிந்து விட்டனர். ஏற்கனவே சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளில் தனியார் கொள்ளை லாபம் ஈட்டுவதற்கு வகை செய்திடும் விதத்தில் அவற்றை தனியாரிடம் கணிசமான அளவிற்கு தாரை வார்த்து விட்டனர். இப்போது இந்த பணப்பட்டுவாடா திட்டம் என்ற

பெயரில் நியாய விலைக் கடைகளில் மானியத்தோடு தரப்படும் பொருட்களுக்கு இனி எதிர்காலத்தில் மானியத்தை வெட்டிவிட "காசைக்காட்டி" மக்களை ஆசைகாட்டி ஏமாற்றும் திட்டமாக நியாய விலைக் கடைகளை மூடிவிடும் சூழ்ச்சியே இது நிச்சயமாக மக்களை மேலும் படு குழியில் தள்ளி பெரும்பான்மையான மக்களின் வயிற்றில் அடிக்கும் திட்டமேயாகும்.

இந்த திட்டம் மின் ஊழியர்களாகிய நம்மையும் பாதிப்புக்குள்ளாக்கும் திட்டம். எனவே பொது மக்களில் மக்களாக நாமும் இதனை தடுத்து நிறுத்திட வேண்டாமா? நாட்டு மக்களையும், நம்மையும் பாதிக்கும் அரசின் மக்கள் விரோத பிற்போக்குதனமான கொள்கைகளை நாட்டை விட்டே விரட்டியடிக்க வேண்டாமா?

**"தயாராவோம் பிப்ரவரி 20, 21 பொது வேலை நிறுத்தத்திற்கு"**

**வெற்றி பெறச் செய்வோம் - வாரீர்!**

**ஈ. அந்தோணி**

# மின்சார பிரச்சனை, மக்கள் பிரச்சனையாக மாறும் காலம் வெகுதொலைவில் இல்லை

வரலாற்று ஆசிரியர்கள் ஆப்பிரிக்காவை இருண்ட கண்டம் என்று சொல்வார்கள். இன்றோ இந்தியாவில் தமிழகமும் அதே போல் அழைக்கப்படுகின்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். மின்துறையை பாதுகாப்பது தமிழகத்தையும் அதனோடு இணைந்த வளர்ச்சியை மட்டுமல்ல தமிழக ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்பு கொண்டது என்பதை உணராத காரணத்தினால் ஏற்பட்ட மின்சார நெருக்கடிக்கு யார் காரணம் என்பதை தமிழக மக்கள் இப்போது தெளிவாக உணர்ந்துள்ளனர்.

அக்டோபர் 20 ம் தேதி 3000 மெகாவாட் சூரிய சக்தி மின்சார உற்பத்தி அரசு கொள்கையை வெளியிட்டது. தமிழக மக்கள் வரவேற்றனர், நாமும் வரவேற்றோம். ஆனால் அதில் உள்ள எண்ணற்ற சாத்திய கூறுகளை அரசு துள்ளியமாக கணக்கீடு செய்ததா என்றால் சந்தேகமே.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அண்மைக்கால கடன் மற்றும் இடைக்கால கடன் மட்டும் ரூ. 19058 கோடிகளாகும். இந்தியாவில் உள்ள மற்ற மின்வாரியங்களுக்கும் இதே போல கடன்கள் உண்டு. இதனை சரி செய்வதற்காக செப்டம்பர் 2012 ம் ஆண்டு மத்திய அரசு திட்டம் ஒன்றை கொண்டு வந்தது. இந்த திட்டம் மூலம் பயன் பெற வேண்டுமெனில் தமிழ்நாட்டின் மின் பகிர்மான பிரிவை தனியாருக்கு தர வேண்டும் என்பதற்கான முன் வரைவு திட்டத்தை ஓராண்டிற்குள் மத்திய அரசுக்கு சமர்பிக்க வேண்டும் என்ற முன் நிபந்தனையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிகிறது. இது குறித்து தமிழக மக்களுக்கோ, மின்வாரிய ஊழியர்களுக்கோ தெரியப்படுத்த வில்லை.

தமிழக அரசு இந்த முன் நிபந்தனையை ஏற்றுக் கொண்டதற்கு காரணம் இனியும் பொதுத்துறையாக நீட்டிக்க அரசு விரும்பாததும் மின்சாரத்துறையை தனியார் துறை பார்த்துக் கொள்ளட்டும் என்ற புதிய கொள்கையை ஏற்றுக் கொண்டதின் வெளிப்பாடு என்றே நமக்கு புலப்படுகிறது.

தமிழ்நாட்டின் இன்றைய மின்சார உற்பத்தி 8000 - 8500 மெகாவாட். தேவைக்கான மின்சாரத்தில் 3500 - 4000 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. இது சுமார் 35 - 40 % என்றும் அதை மின் வெட்டு மூலம் சரி செய்து ஈடுகட்டியது 900 மெகாவாட் என்றும் அரசு குறிப்பு சொல்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 8% மின்சார தேவை கூடுகிறது.

## மின்சார தேவை

| ஆண்டு | மின் தேவை |
|---|---|
| 2014 | 15000 மெகாவாட் |
| 2015 | 16100 மெகாவாட் |
| 2016 | 17200 மெகாவாட் |

3000 மெகாவாட் சூரிய சக்தியை நாம் பெரிதாக நம்பமுடியாது. சூரிய ஒளி பகலில் மட்டுமே கிடைக்கும் நிலையற்றது. சூரிய சக்தியால் முழுமையான மின்சாரம் நமக்கு கிடைக்காது. நமது தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது. எனவே இதனை நம்பி நாம் திட்டம் போட முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

இது போன்ற மின்சார உற்பத்திக்கு பல ஆயிரம் கோடிகள் முதலீடு செய்வதோ, மின் பகிர்மானங்களில் உள்ள பிரச்சனைகளை தீர்த்தோ அரசுத் துறையாக நீட்டிக்க மத்திய மாநில அரசுகள்

விரும்பாத காரணத்தினால் தனியாருக்கு கொடுத்துவிடலாம் என்ற கொள்கை முடிவை மத்திய, மாநில அரசுகள் எடுத்ததின் விளைவே மின்சார சட்டம் 2003. அரசின் தவறான கொள்கை முடிவுகளால், மின்சாரம் விலைக்கு வாங்கியதில், நிலக்கரி விலைக்கு வாங்கியதில், திறமையற்ற நிர்வாகத்தினால் ஏற்பட்ட மின்வாரிய இழப்பு 54,000 கோடியை மீண்டும் மக்கள் மீதே சுமத்தியது. தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் ஓட்டு போட்ட மக்கள் மீதே மின் கட்டண உயர்வாக அறிவிப்பது அரசின், நிர்வாகத்தின் சிறப்பான மேலாண்மைக்கு உதாரணமாக அமையாது.

மின்சாரம், மக்களின் அன்றாட பயன்பாட்டுக்கான ஜீவ ஆதாரமான தேவை என்பதை அரசு உணர்ந்து மக்களுக்கு தொடர்ந்து வாங்கும் சக்திக்கு ஏற்ற விலையில் தர வேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் மின்சாரம் சந்தை பொருளாக மாற்றப்பட்டு, சந்தையில் மக்கள் வாங்கும் நிலை ஏற்படுமானால் அந்த நிலையை மக்கள் ஏற்க மாட்டார்கள், மக்கள் மன்றத்திலும், சட்ட மன்றத்திலும் அதற்கான போராட்டத்தை தொடருவார்கள்.

மக்களுக்கு தேவையான மின்சாரத்தை அரசே உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கான தொலை நோக்கு திட்டத்துடன் அரசு செயல்படுவதன் மூலமே எதிர்கால மின்சார பற்றாக்குறையை தீர்க்க முடியும். அப்போதுதான் அம்பேத்கர் கொண்டு வந்த மின்சார சட்டத்தின் உண்மை பொருள் மக்களை சென்றடையும்.

**- தி. ஜெயசங்கர்**

## 31.10.2008க்கு பின்னரும் காற்றாலை மின் உற்பத்தி வட்டத்தில் பணியில் சேர்ந்தவர்களுக்கு காற்றாலை மற்றும், நீர்மின் படி வழங்க வகை செய்யும் வாரிய உத்தரவு

TAMIL N ADU GENERATION & DISTRIBUTION CORPORATION LIMITED

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI,
Chennai- 2.

**Memo. No. 9373/A3/A32/2009-6, Dated 11.01.2013**

Sub : TANGEDCO - Allowances - Wind Farm Allowances to the employees working in wind farm stations - Condition of payment to the wind farm areas - Clarification - Orders - Issued.

Ref : 1. (Per) B.P. (FB) No.31, (SB) Dated : 10.06.1994.
2. (Per).B.P. (FB) No.100 (SB) dt 13.12.2000.
3. From the Chief Engineer/Non Conventional Energy Sources, Lr. No. 002483/533/CE/NCES/N.10/N.104/2009 Dated:21.11.2009

In the Board's Proceedings first Cited, orders were issued sanctioning Hydro and Wind farm allowance to the employees of Hydro Stations and Wind Farm areas respectively. Subsequently in the Board's Proceedings second cited, modified orders were issued allowing Hydro / Wind farm allowance to the employees in Hydro and wind farm stations from the date of appointment / joining in the respective stations.

2) It has been represented that the Wind farm allowance is not allowed to the employees joined in the Office of the Superintending Engineer / NCES/ Udumalpet after 31.10.2008 from which date the administrative control of the Superintending Engineer / NCES was attached with the Superintending Engineer / Udumalpet Electricity Distribution Circle.

3) The matter has been examined in detail and it is hereby clarified that all the employees under the Technical control of Superintending Engineer /NCES including the new employees who joined in the Wind Energy Development Circle / Udumalpet after 31.10.2008 be allowed Wind Farm allowance from the date of appointment / joining in Non Conventional Energy Sources. The Same could not be allowed to the employees borne in the roll of Udumalpet Electricity Distribution circle and are working in the substations.

4) Receipt of the Memo. shall be acknowledged.

A.S. PASUPATHI
SECRETARY



# ஆதலினால் காதல் செய்வீர்....

உலகினில் இல்வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல தமிழனின் வாழ்க்கை வரலாறும் காதலும் வீரமும் கலந்த கல் வெட்டுகள் வரலாறுதான் தன் காதலுக்காக மண்ணையும் பொன்னையும் துறந்த மன்னர்களின் வரலாறு காவியம் நிறைந்தது தமிழ் மண்ணின் வாசம் வீசும் எனவேதான் கண்ணதாசன் தன் பாடலில்

"காதல் சிறகை காற்றினில் ஏந்தி

வானவீதியில் பறக்கவா" - என்றான்

வானவீதியில் பறந்தால் நாடு எல்லைக்கோடு ஏதுவும் கிடையாத பறந்த பிரபஞ்சம் காதலின் இந்த பாடல் இன்றைய காதலர்களையும் காற்றில் பறக்க செய்து சிறகடிக்க செய்யும்.

ஆனால் இன்றைய நவீன விஞ்ஞான உலகில்... தமிழின தலைவர்கள் என்று சொல்லும் சில பாட்டாளி தலைவர்கள் ஆதிக்க சாதிய சக்திகளை ஒன்று திரட்டி காதல் கலப்பு திருமணங்களுக்கு எதிராக குரல் கொடுத்து சாதிய மோதலுக்கு வழி செய்து வருகின்றனர்.

பாட்டாளி மக்கள் கட்சி சமீபத்தில் நடத்திய மாநாட்டில் அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் காடு வெட்டி குரு பேசியது வன்னிய சாதிப்பெண்ணை வேறு சாதியை சார்ந்த யாராவது திருமணம் செய்ய முற்பட்டால் அவனை வெட்டுவேன் குத்துவேன் என்று பேசியுள்ளார். அதன் எதிரொலிதான் தர்மபுரியில் 320 வீடுகள் சாம்பலாயின.

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் கலப்பு திருமணத்துக்கு எதிராக பேசியும் எழுதியும் வருகிறார்கள். இது வருணசர தர்மம் பாதுகாப்பாகும் ஆனால். இவர்களோ மெத்தபடித்த அந்நிய நாட்டுக்கு பணிக்கு சென்று அந்த மேற்கத்திய கலாச்சாரத்தில் ஐக்கியமாகிவிடுகிறார்கள்.

நாமக்கல் கொங்கு வெள்ளாள கவுண்டர் பேரவையின் தலைவர் பொங்கலூர் ஆர். மணிகண்டன் நமது சமூகத்தை சேர்ந்தவர்கள் கலப்பு திருமணம் செய்து கொள்ளக்கூடாது அப்படி செய்து கொண்டால் நமது இளைஞர் பாசறை அவர்களை தாக்கி தடுக்க வேண்டும் என்கிறார்.

இவர்கள் வரிசையில் அ.இ.அ.தி.மு.க. - வின் சட்ட மன்ற உறுப்பினரும் அக்கட்சியின் இலக்கிய அணி செயலாளருமான பழ. கருப்பையா நாட்டு கோட்டை நகரத்தார் (செட்டியார்)களுக்கு சில அடையாளங்கள் உண்டு. அது நேர்மை, ஆழமான பக்தி, சிக்கனம், அருட்கொடை, திட்டுமிடுதல் ஆகும் நம் சமூகம் கலப்பு திருமணம் செய்து கொண்டால் இவை முற்றிலும் முறிந்துவிடும் என்று பழமை வாதம் பேசுகிறார். சாதியம் காக்கிறார்.

இன்றைய பொதுவுடமை தலைவர்கள், மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத், அரசியல் தலைகுழு உறுப்பினர் சீத்தாராம் யெச்சூரி, மாநில செயலாளர் ஜீ. ராமகிருஷ்ணன், சி.ஐ.டி.யு. மாநில பொதுச் செயலாளர் அ. சவுந்தரராஜன், கே. பாலகிருஷ்ணன், உ. ரா. வரதராஜன், ப. செல்வசிங், உ. வாசுகி, பி. சண்முகம், பி. சம்பத், எஸ். சுவாமிநாதன், பி.ஆர். நடராஜன் எம்.பி., இப்படியாய் அடிமட்ட ஊழியர்கள் வரை எங்கள் தலைவர்கள் சாதி பார்க்காமல், மதம் பார்க்காமல், மொழி பார்க்காமல் இனம் பார்க்காமல் உழைப்பாளி வர்க்கங்களுக்காய், உழைப்பாளி மக்களின் விடுதலையை முன் எடுப்பவர்களாய் அதற்கான களம் காண்பதிலே காலந்தோறும் கலப்பு திருமணம் செய்து சாதியத்தின் வேர் அறுத்து சாய்த்து உள்ளனர்.

1925-ல் ஆண்டு சுய மரியாதை இயக்கத்தை துவங்கிய தந்தை பெரியார் பல ஆயிரம் கலப்பு திருமணங்களை செய்து வைத்தவர் அன்றைய பொழுதில் மகாத்மா காந்தி வெளியிட்ட அறிக்கை அவரை அதிர்ச்சியடைச் செய்தது அது. நான் “நால்வர்ண முறையில், நம்பிக்கை உள்ளவன்” என்ற கொள்கை. ஆனால் நாம் எல்லோரும் இந்துக்களே எனவே காங்கிரஸ் மாநாட்டில் சம பந்தி போஜனம் போடப்படும் என்றார் காந்தி அவர்கள்.

இவர்கள் எல்லொரும் சேர்ந்து கோவையில் சாதிய சமூக பாதுகாப்பு மாநாடு நடத்தியுள்ளனர். அதில் கம்யூனிஸ்ட்டுகள் கலப்பு திருமணம் செய்ய தயராக உள்ளார்களா? என்று தமிழின தலைவர் கேட்டிருக்கிறார்.

தூங்குபவனை ஏழுப்பலாம். தூங்குவது போல் நடிப்பவனை எழுப்பமுடியாது உணர்த்த முடியும் ஆம் இதோ.

மார்க்சிய இயக்கத்தின் ஆசான் - காரல் மார்க்ஸ் தன் காதலித்த ஜென்னிவான் வெஸ்ட்பாவை பதிவு திருமணம் செய்து கொண்டவர்.

அவரின் சக தோழர் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் மார்க்சை போலவே. மேரிவர்ன்ஸ் என்ற அயர்லாந்து நாட்டை சேர்ந்த பெண் தொழிலாளியை திருமணம் செய்து கொண்டவர் மற்றும் பண்டிதர் நேரு, அண்ணல் காந்தி, சி. சுப்ரமணியம், தோழர் பி. ராமமூர்த்தி, ஜீவா, பி. சீனிவாசராவ், என். சங்கரைய்யா, ஆர். உமாநாத், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, கேப்டன் லட்சுமி, பி. சுந்தரய்யா, எஸ்.ஏ. டாங்கே, ஏ.கே. கோபாலன், பி.டி. ரணதிவே, அஜய் கோஸ், கே. ரமணி, கே. முத்தையா, பி. மாணிக்கம், கே.பி. ஜானகி, சி. கோவிந்தராஜன், என். வரதராஜன், எஸ். ஏ. தங்கராஜ், மதுரை எஸ். பாலு. அன்றே பெரியார் சொன்னார். எங்களுக்கு “சமபந்தி போஜனம் வேண்டாம்” “சம்மந்தி போஜனம் வேண்டும்” என்று சொல்லி காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

அவருடைய திராவிட கொள்கை பேசுபவர்கள் இன்றும் ஒன்றிணைந்து கலப்பு திருமணத்துக்கு எதிராக மாநாடுகள் நடத்துவது அதற்கு மாவட்ட ஆட்சியர்கள் தடைகள் விதிப்பது, ஆணும், பெண்ணும் தங்கள் விரும்புபவரை வாழ்க்கை துணையாக ஏற்பதை மறுக்கக் கூடிய, பிரபுத்துவ போக்கு, சொத்துடைமை, பாதுகாப்பு, சாதிய, அரசியலில் குளிர் காய்ந்து பதவிகளை பெறுவது உழைப்பாளி மக்கள் சாதி மறந்து பாட்டாளி வர்க்கமாய் மாறுவதை தடுப்பது போன்ற தீய சக்திகளை தமிழக உழைப்பாளி மக்களாகிய நாம் விரட்டியடிப்போம் இதற்கான களப் போரில் நமது தீண்டாமை ஒழிப்பு முன்னணி முதற்படையாய் இருக்கிறது. அப்படையில் நாமும் இணைந்து போராடுவோம்.

கவிஞர் வைரமுத்து இப்படி முழங்குகிறார்

நாங்களெல்லாம் தூங்கும்போது நீங்கள் போட்ட சங்கிலி...

காலங் காலமாய் நீங்கள் காவல் காத்த சங்கிலி

சங்கிலி தெரிக்கும் போது தெரியும் - உங்கள் சங்கதி

எங்கள் தீ எழுந்து வந்தால் என்னவாகும் உம்கதி!

- கோ. மோகன்ராஜ்

# 5 ஆண்டு கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையாக பணியாற்றிவர்களை கணக்கீட்டாளராக பதவி உயர்வு அளிக்க தகுதிகாண் அறிக்கை கேட்ட குறிப்பாணை

TAMIL N ADU GENERATION & DISTRIBUTION CORPORATION
(Administrative Branch)

8th Floor, NPKRR Maaligai,'
144, Anna Salai,Chennai- 600 002.

**Memo. No. 072028/997/G26/G26/2012-1, Dated 12.01.2013**

Sub : Estt- Class IV Service- Assessor Grade II, promotion to the post of Assessor D.P. and suitability reports - called for.

Ref : 1. (Per) B.P. (FB) No.42, (Adm.Br.) dt 06.09.2007.
2. (Per).B.P. (FB) No,.45(Adm.Br.) dt 06.09.2007.

I am to inform that a new category of Assessor Grade II created exclusively for Meter Reading on Assessment of C.C. Charges in class IV services of the Board's Vide B.P. under reference first cited. Accordingly, the Contract Labourers who is having the qualification of S.S.L.C. and above were absorbed in that post. Also, the said category is filled up thro' compassionate appointment and by Direct Recruitment.

Further, the Board has issued orders for prescribing 5 years of service in the post of Assessor Grade II for their post promotion to the next higher post vide BP under reference 2 nd cited. Accordingly, the Assessor Grade II employees have to be promotd to the next higher post i.e. Assessor in the time scale of pay of Rs. 5400-20200+2200 Grade pay. Hence, the employees of Assessor Grade II are likely to come up for consideration for promotion to the post of Regular Assessor.

Iam to request you to furnish the names of Assessor Grade II who have completed 5 years of service in that post as required in the format enclosed and certify that the pariticulars furnished therein are correct.

The particulars of pending of D.P. if any initiated against the Assessor Grade II and the punishment now under going may be clearly furnished in the format along with 4 copies of charges memo / final orders promptly.

Iam to request you to furnish the suitability report of the Assessor Grade II in the format on or before 10.02.2013 so as to prepare a panel statement for placing the same before the D.P.C.

Iam to request you to fix responsibility on the concerned officer to furnish the reports on or before the above stipulated time limit without waiting for a reminder from this office.

**Encl : One Format**

**yours faithfuily**
**(S.R. MURALIDHARAN)**
**Asst. Personnel Officer / C.S.**
**for CHIEF ENGINEER / PERSONNEL**

# Format

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Assessor Grade II | | : |
| 2. | Date of Birth & Date of Retirement | | : |
| 3. | Date of joining as Assessor Grade II | | : |
| 4. | Present Circle now working | | : |
| 5. | Whether absorbed from C.L./ Compassionate appointment | | : |
| 6. | Date of completion of 5 years in the post of Assessor Grade II | | : |
| 7. | Academic Qualification and whether they possess | | : |
| | (a) | Minimum General Educational qualification | : |
| | (b) | Whether the Assessor Grade II has acquired adequate knowledge in Tamil by passing the language test conducted by the Govt, OR by passing the SSLC with Tamil language as one of the subject | : |
| 8. | whether the assessor Grade II is involved in any D.P. / Undergoing Punishment and if so, the details of Charges and copy of final orders may be furnished 4 copies (enclosing copy of charge memo.) | | : |
| | i) Date of Commencement of punishment | | : |
| | ii) Date of Completion of Punishment | | : |
| 9. | Whether any vigilance enquiry is pending, if so to furnish the details with reference. | | |
| 10. | Whether the Assessor has completed 5 years of service as Assessor Grade II as per B.P. (FB) No. 45, dt. 06.09.2007 | | : |
| 11. | Whether the Assessor Grade II is Suitable for Promotion | | : |

I ceftify that the above pariticulars are correct.

SUPERINTENDING ENGINEER

உலக எரிசக்தி தொழிலாளர் மாநாடு 2012 நவ. 29 முதல் 30 வரை வெனிசுலாவில் கார்காஸ் நகரில் வெனிசுலா நாட்டின் பெட்ரோலியம் மற்றும் மின்சாரத் தொழிலாளர் சம்மேளனங்களினால் நடத்தப்பட்டது.




இம்மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து 100 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இத்தியாவில் இருந்து இந்திய தொழிற்சங்க மையத்தின் செயலாளர் தோழர் தேவ்ராய் தலைமையில் 9 பேர்கள் கலந்து கொண்டனர்.

இதில் உலக எரிசக்தி தொழிற்சங்கத்தின் சார்பாக முன்வைக்கப்பட்ட தலைமையுரையை தோழர் தேவ்ராய் முன்வைத்தார்.

அவரது உரையில்.....

ஏகாதிபத்தியத்தின் நேரடியான, மறைமுகத் தாக்குதல்களிலிருந்து விடுதலையை அரபுநாடு பெற்றிடவேண்டும். அரபு நாட்டிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் முழுமையான சுதந்திர அரசை பெற்றாலும் தொடர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்பினை செய்திடல் வேண்டும்.

இத்தகைய நிகழ்வில் லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுகளை நிறுவியுள்ளனர். அதே பாதையில் சென்று ஐரோப்பிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அரபு நாடுகளின் பகுதிகளிலிருந்து விரட்டி அடித்தல் வேண்டும்.

அமெரிக்க நாடானது உலக மக்கள் தொகையில் 4.5 சதவீதமே உள்ளது. ஆனால் உலக பெட்ரோலிய நுகர்வில் 25 சதமான பெட்ரோலியத்தை ஆண்டுதோறும் செலவழிக்கின்றது.

அமெரிக்கா ஒரு நாளைக்கு 195 லட்சம் பாரல் குருடாயிலை இறக்குமதி செய்கிறது. இது உலக எண்ணெய் தேவையில் 51 சதவீதம் ஆகும். இது 2020 ல் 255 லட்சம் பாரால்களாக உயருமாம். ஆனால் தனது நாட்டு உற்பத்தியை 1970 ஆம் ஆண்டின் உச்ச கட்ட உற்பத்தியானதில் 39 சதம் மட்டுமே உற்பத்தி செய்கிறது என்றால் உள் நாட்டு எண்ணெயை எதிர்காலத்திற்காக பாதுகாக்கிறதாம்.

உலக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் 20% அளவில் எண்ணெய்யை வெனிசுலா நாடு உற்பத்தி செய்கின்றது. வெனிசுலா நாட்டின் அதிபர் ஹியுகோ சாவேஸ் அவர்கள் 1 பாரல் எண்ணெய் விலையை 50 டாலருக்கு விற்பனை செய்கின்றார். அதன் மூலம் கிடைக்கும் தொகையை வெனிசுலா மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றார்.

சீனாவும் சவூதி அரேபியாவும் இணைந்து

மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை சவூதி அரேபியாவில் நிறுவியுள்ளன சீனாவின் முதலீட்டில் இதே போன்று எகிப்திலும், நைஜீரியாவிலும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

எரிசக்தி துறைமுழுவதும் தொழிற்சங்கம் சந்திக்கும் சவால்களானது நாடுகள் வாரியாக எரிசக்தி துறையில் தொழிற்சங்கம் சந்திக்கும் சவால்களைப் போன்றே உள்ளது. எரிசக்தி என்பது எண்ணெய், நிலக்கரி, மின்சாரம் மூன்றும் இணைந்தது ஆகும். இத்துறைகளை பாதித்து இருக்கும் பல்வேறு பிரச்சினைகள் பல்வேறு வகையாக உள்ளது.

எரிவுாயு மற்றும் எண்ணெய் துறைகள் ஏகாதிபத்திய சக்திகளின் பகாசூரப்பசிக்கு ஆளாகியுள்ளது. நிலக்கரித்துறை தனியார் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களினால் கொள்ளையடிக்கப் படுகின்றது. மின்சாரம் என்பது மூன்று கூறுகளாகபிரிக்கப்பட்டு சேவைத்துறையாக இருந்து லாபநோக்கு துறையாக மாற்றப்பட்டுள்ளது.

மோசமான தனியார்மயக் கொள்கையினால் நிலக்கரி சுரங்கங்கள் பெரும்பாலான நாடுகளில் தனியார் ஏகபோகத்திற்கு விடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில் தொழிற்சங்க இயக்கம் கடுமையான விளைவுகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மின்சாரத்துறையில் மின் நுகர்விலும் மின் கட்டணத்திலும் உள்ள பிரச்சினைகளானது உலக மக்களின் பிரச்சனையாக கொள்ளலாம். இதனால் மின் துறை மிகவும் மோசமான நிலைக்கு சென்றுவிட்டது. அமெரிக்காவையே உதாரணமாக கொள்ளலாம். மின்துறையை அமெரிக்க நாடு தனியார் மயமாக்கியதால் அமெரிக்கா அடிக்கடி இருளில் மூழ்கி வருகின்றது.

நவீன தாராளமயக் கொள்கைகளினால் நாட்டு மக்கள் மட்டுமல்ல தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இத்துறைகளில் உள்ள தொழிற்சங்கம் மக்களுடன் ஒன்று சேர்ந்து நவீன தாராளமயக் கொள்கைகளை எதிர்த்து போராட வேண்டும்.

எரிசக்தி துறையில் ஒப்பந்த தொழிலாளர்களைக் கொண்டு குறைந்த கூலி கொடுத்து வேலை வாங்குவது என்ற முறை உலகம் முழுவதும் அதிகமாகியுள்ளதை ஒழித்திட போராட வேண்டியுள்ளது. இத்தகைய நடவடிக்கையானது சுரண்டலை எதிர்ப்பது மட்டுமல்ல தொழிற்சங்க நடவடிக்கைக்கும் ஒப்பந்த தொழிலாளர் முறை சவாலாக இருக்கும் என்பதற்காகவும் போராட வேண்டும்.

மூலதனத்தை எதிர்த்த போராட்டத்தை வர்க்க போராட்டமாக புரிந்து போராடுதல் வேண்டும் என்று தோழர் தேவ்ராய் அவர்கள் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

எரிசக்தி துறையை மையமாக வைத்து தாக்குதலை நடத்தும் ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கங்களை எதிர்த்து பிரச்சாரம் செய்வதுடன் உலகம் முழுவதுமான போராட்டத்தை நாம் பரவலாக நடத்திட வேண்டும்.

எண்ணெய் விலையை நிர்ணயிப்பதில் பல்வேறு சுயநல நடவடிக்கையை முன் வைத்து செய்யும் மோசடித் தனங்களை அம்பலப் படுத்துவதுடன் அதை முறியடித்தல் வேண்டும்.

ஒப்பந்த முறை, அவுட்சோர்சிங் முறைகளை முற்றிலுமாக எதிர்ப்பதுடன் ஒழித்திடவும் வேண்டும் அதே நேரத்தில் நிரந்தரமற்ற தொழிலாளர்களை திரட்டிட வேண்டும்.

கண்டம் வாரியாக நாடு வாரியாக மண்டலங்களை உருவாக்கி இயக்கங்களை நடத்துவதுடன் பகுதி வாரியாகவும் தொழிற்சங்க செயல்பாட்டை உத்தரவாதப்படுத்திட வேண்டும்.

*ஆதாரம் - பீப்பிள்ஸ் டெமாக்ரசி*

**25 ஆண்டுகாலம் பணியாற்றிய அரசு ஊழியர்களுக்கு அவர்களை கௌரவிக்கும் வகையில் ரூ.2000/- த்தை ஊக்கத் தொகையாக வழங்க அரசு பிறப்பித்த ஆணையும், அதை மின் வாரியங்கள் போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற அரசு உத்தரவும் அதை மின் வாரியத்தில் அமல்படுத்திட வேண்டியும் மின் ஊழியர் மத்திய அமைப்பு வாரியத் தலைவருக்கு எழுதிய கடிதம்**

Finance (BPE) Department,
Secretariat,
Chennai - 600 009

**Letter No. 64466/Fin(BPE)/2012 dated 29.11.2012**

From
Thiru. K. Shanmugam, I.A.S
Principal Secretary to Government

To
The Chief Executive Officers of all
State Public Sector Undertakings / Statutory Boards.
Sir / Madam,

Sub : Award of Incentive to the Government employees who have rendered 25 years of unblemished service - Orders issued - Extension of the same to State Public Sector Undertakings / Statutory Boards - Regarding.

Ref : 1) G.O. Ms. No. 390 / Finance (Paycell) Dept dt. 7.11.2012.

Iam directed to enclose a copy of the G.O. cited where in the Government have issued orders sanctioning cash award of Rs. 2000/- (Rupees two thousand only) as an incentive to the employees who have rendered twenty five years of unblemished service along with a Certificate (Annexure) and request you to adopt the above G.O. after placing the same before the Board of your Corporation / Statutory Board subject to the conditions that (a) the grant of such cash award of Rs. 2000/- (Rupees two thousand only) shall be considered in respect of the employees who have completed 25 years of unblemished service in the organization (b) unblemished record of service would mean absence of any punishment or adverse remark in the record excluding warnings (c) consideration of such award in respect of the employees against whom a charge is pending or contemplated may be deferred and the same may be taken up if they are exonerated subsequently (d) any sort of financial assistance from the Government shall not be sought for while implementing the above concession.

Yours faithfully,
for Principal Secretary to Government

Copy to:
All Departments of Secretariat,
All finance Directors

# GOVERNMENT OF TAMILNADU

**(Abstract)**

Award of cash incentive to the Government employees who have rendered 25 years of unblemished service - Orders Issued.

**FINANCE (PAY CELL) DEPARTMENT**

**G.O.Ms.No.390** **Dated:07—11—2012**

Iypasi, 22.
Thiruvalluvar Aandu, 2043.

**Read:**

1. G.O.Ms.No.13, Finance (Pay Cell) Department, dated: 04—01—1996.
2. SB Order No.22 / 2011, letter No.113-01 / 2011-SB dated: 24-11-2011, the Department of Posts, Ministry of Communication and Information Technology, Government of India.

**ORDER:**

In the Government Order read above, orders have been issued to the effect that the Government employees who have completed 25 years of unblemished service under the State Government shall be awarded with an Indira Vikas Patra in the denomination of Rs.1,000/- (Rupees one thousand only) with an initial value of Rs.500/-(Rupees five hundred only). Subsequently, Kisan Vikas Patra was issued in

lieu of Indira Vikas Patra.

**2)** In the letter second read above, the Government of India has conveyed its decision of discontinuing the sale of Kisan Vikas Patra with effect from 1—12—2011 consequent on rationalization of schemes.

**3**) Consequent on the closure of the scheme of Kisan Vikas Patra, requests were made from various Departments of Secretariat / Head of Departments to provide an alternate incentive in lieu of Kisan Vikas Patra awarded for rendering of 25 years of unblemished service by the employees. The Government has examined the issue in detail and considering the quantum of incentive fixed fifteen years ago, it was felt necessary that the twenty five years of unblemished service rendered by the employees should be recognised in a proper perspective and therefore it has been decided to grant cash award as an incentive to the above employees. Accordingly, Government direct that a cash award of Rs.2,000/- (Rupees two thousand only) shall be sanctioned to the employees who have rendered twenty five years of unblemished service along with a Certificate (Annexure enclosed) issued on behalf of Government duly recognizing their unblemished services.

**4**) The Government also direct that the appointing authorities concerned shall prepare a list of employees who have completed 25 years of unblemished service once in every six months i.e. on the 1st January and 1st July of every year and issue sanction orders for issue of cash award of Rs.2,000/- (Rupees two thousand only) so as to enable the Drawing and Disbursing Officers to claim the same and make payment to the employees concerned. Further, there shall be no

change in the conditions stipulated in para—3 of the Government Order cited and subsequent clarification issued in this regard.

**5**) These orders shall also apply to the teaching and non-teaching staff of local bodies and aided educational institutions.

**6**) The expenditure shall be debited to the detailed head of account "59 Prizes and Awards" under the relevant sub-head, minor, sub-major and major heads of account.

**7**) Necessary additional funds will be provided in Revised Estimate / Final Modified Appropriation 2012–2013. Pending provision of such funds, the Heads of Department concerned are permitted to incur the expenditure under the relevant head of account and the same may be included in the proposals sent to Government for Revised Estimate / Final Modified Appropriation 2012—2013.

**8**) In cases where the sanction for issue of Kisan Vikas Patra has already been made and the amount drawn and kept in the accounts of the Drawing Officers for purchase of Kisan Vikas Patra, which has been dispensed such amounts shall be remitted to the Government account and orders sanctioning Kisan Vikas Patra in such cases shall be cancelled and fresh orders be issued for sanction of cash award

to such employees.

**9**) This order is issued with Additional Sanction Ledger No.1568 (One Thousand Five Hundred and Sixty Eight)

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM,**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

## ANNEXURE
## CERTIFICATE OF COMMEMORATION

Certified that Thiru / Tmt.-------------------------------------------------------------------

working as ---------------------------------------------- in --------------------------------------

Department has completed 25 years of unblemished service on ----------------- .The unblemished services rendered by the above employee is commemorated by Government.

Dated:
Place :

HEAD OF DEPARTMENT /
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

//True Copy//

**UNDER SECRETARY TO GOVERNMENT.**

நாள்: **18.1.2013**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

**ஐயா,**

**பொருள் : பணியமைப்பு - நிர்வாகம் தமிழ்நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளித்ததை போல் ரூ. 2000/- ஊக்கத் தொகைக்கான உத்தரவை உடனடியாக வெளியிடக் கோருதல் - சம்மந்தமாக.**

**பார்வை : 1) அரசு ஆணை எம்.எஸ்.எண். / 390 / நிதித்துறை / சம்பளப் பிரிவு நாள் 7.11.2012.**
**2) அரசு கடித எண். 64466 / எப்.ஐ.என். (பி.பி.இ.) 2012 நாள் 29.11.2012.**

தமிழக மின் வாரியத்தில் பணியாற்றும் அனைத்துப்பிரிவு ஊழியர்களுக்கும் தமிழக அரசு அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையும், பணி சான்றிதழையும் அளித்து பிறப்பித்த உத்தரவை தமிழ்நாடு மின் வாரிய ஊழியர்களுக்கும் பொருந்தும் வகையில் உத்தரவிட கோருதல் சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களது கவனத்திற்கும் உடன் நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகின்றோம்.

பார்வை ஒன்றில் கண்ட அரசு ஆணையில் அரசு ஊழியர்களின் பணிகளை ஊக்குவிக்கும் விதமாக 25 ஆண்டு காலம் பணியாற்றிய ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 2000/- வழங்கப்படும் என்றும் இதற்கான பட்டியலை சம்மந்தப்பட்ட துறை தலைமை தயாரித்து அமல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்திட வேண்டும் என்றும், பின்னர் 6 மாதத்திற்கு ஒரு முறை 25 ஆண்டு காலம் பணியாற்றிய ஊழியர்களின் பட்டியலை எடுத்து அவர்களுக்கு ஊக்கத் தொகையும், பணிச் சான்றிதழ் வழங்கப்படும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்வை இரண்டில் கண்ட அரசின் கடிதத்தில் பார்வை ஒன்றில் கண்ட அரசு உத்தரவில் சொல்லப்பட்ட ரூ. 2000/- ஊக்கத் தொகையும், பணிச்சான்றிதழும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் வாரிய ஊழியர்களுக்கும் இதை உடனடியாக அமல்படுத்திட வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து, பார்வை ஒன்றில் கண்ட அரசு உத்தரவில் சொல்லப்பட்டுள்ள விதியான 25 ஆண்டுகாலம் பணியாற்றிய ஊழியர்களுக்கு ரூ. 2000/- ஊக்கத் தொகையையும், பணிச்சான்றிதழையும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

எனவே தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது உடன் நடவடிக்கை எடுத்து, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல 25 ஆண்டு காலம் பணி முடித்த அனைத்து ஊழியர்களுக்கும் ரூ. 2000/- பணி ஊக்கத் தொகையாகவும், பணிச்சான்றிதழையும் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள

**(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

**இணைப்பு :-**
அரசு ஆணை. நகல் - 1
அரசு கடித நகல் - 1

# பாலியல் வன்முறைகள் அரசியல் - ஆன்மீகவாதிகள் பார்வையில்

- தஞ்சை தனலெட்சுமி

இந்தியாவின் ஒட்டுமொத்த மக்களின் இதயமும் விம்மி கண்ணீர் வடித்த நாள் 28.12.2012 காரணம் டெல்லியில் 16.12.2012 அன்று ஓடும் பேருந்தில் 23 வயதே ஆன இளம்மொட்டு பல கனவுகளோடு வலம் வந்த மருத்துவ மாணவி 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு மரணமடைந்தார். பெயர் அறியாமல் டெல்லி மாணவி என்ற முகவரியுடன் தன்னை சிதைத்தவர்களுக்கு எதிராக போராடி தோற்றதைப்போல மரணத்திற்கு எதிராகவும் 13 நாட்கள் போராடி தோற்றுப்போனாள்.

தான் மீண்டு வருவேன் என்று குடும்பத்திடம் அவர் உறுதியளித்த போதும் அவளது உடல் அந்த உறுதியை ஏற்கவில்லை பெயர் தெரியாத அறியாத அந்த பெண்ணிற்கு மொத்த இந்தியாவே குமுங்கியது. இந்த சம்பவத்தில் இறந்தது ஒரு மாணவி மட்டுமல்ல பெண்ணை நதியாக, தேசமாக, பூமியாக, தெய்வமாக கொண்டாடும் நம் நாட்டின் கௌரவமும்தான்.

டெல்லி சம்பவம் மட்டுமல்ல பல இடங்களிலும் வேலூர், தூத்துக்குடி, புதுவை, கரூர், சென்னை என்று தொடர்ந்து பாலியல் கொடுமைகள் நடைபெறுகின்றன. 18 ஆம் நூற்றாண்டில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட நிலையில் தற்போது கல்வி கற்கும் வாய்ப்பு தாராளமாக வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் பெண்கள் தங்களது அறிவையும், முழுத்திறமையையும் வெளிப்படுத்த முடியாத அளவிற்கு சமூக சிக்கல்கள் உள்ளன.

பெண் என்ற காரணத்தால் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு பாதிக்கப்படும் பெண்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் பாலியல் கொடுமைகளுக்கு எதிரான வழக்குகளை 6 மாதத்திற்குள் விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும். இந்திய தண்டனைச்சட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும். பெண்கள் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டும் என்று பல்வேறு பெண்கள் அமைப்புகளும், சமூக ஆர்வலர்களும், மனித நேயம் உள்ளவர்களும் போராடிக் கொண்டு இருக்கின்றனர்.

ஆனால் இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்வுக்கு அரசியல் - ஆன்மீகவாதிகளின் கருத்து என்பது கேள்விக்குறியாகவும் - கண்டனத்திற்குறியதாகவும் உள்ளது. அரசியல்வாதிகள் பாலியல் பிரச்சனைகளுக்கு தீர்வாக என்னதான் சொல்கிறார்கள் என்று பார்ப்போம்.

**அரசியல்வாதிகள் பார்வையில்**

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கான காரணம் குறித்து சட்டீஸ்கர் மாநில உள்துறை அமைச்சர் நன்கிராம் கன்வர் தெரிவித்துள்ள கருத்து ஜாதகத்தில் கிரகங்களும், நட்சத்திரங்களும் மோசமான நிலையில் இருந்தால் ஒருவருக்கு தீங்கு ஏற்படும் பெண்களுக்கு எதிராக அதிகரிக்கும் குற்றங்களுக்கு கிரக அமைப்பே காரணம் ஆண்கள் காரணமல்ல என்று கூறி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

இதே போல் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மகனும் காங்கிரஸ் எம்.பி. யுமான அபிஜித் முகர்ஜி டெல்லி மாணவிக்காக போராட்டம் நடத்துபவர்கள் எல்லாம் மேக்கப் போட்ட பெண்கள் 2 நிமிட டி.வி. புகழுக்காக போராட்டம் நடத்துகிறார்கள் இவர்கள் அனைவரும் மாணவிகள்தானா? என்று சந்தேகம் எழுகிறது என்று கூறியுள்ளார். நாகரீகமாக உடையணிந்த பெண்கள் போராடக்கூடாதா? அவரின் இந்த பேச்சு நாடுமுழுவதும் கடும் எதிர்ப்பை கிளப்பியது. பெண்கள் அமைப்பினர் போராட்டம் நடத்தினர் கடும் எதிர்ப்பை தொடர்ந்து தனது கேவலமான கருத்துக்காக அபிஜித் முகர்ஜி மன்னிப்பு கேட்டார்.

குஜராத் மாநில பா.ஜ.க. முதல்வர் நரேந்திர மோடி குஜராத் மாநில பெண்கள் ஆரோக்கியத்தைவிட அழகு சாதனங்களில்தான் அதிக கவனம் செலுத்துகின்றனர். பெண்களுக்கு தன்னை அழகுபடுத்திக் கொள்வதைவிட வேறு சிந்தனை இல்லாதது போல் பேசியிருக்கிறார்.

ராஜஸ்தான் மாநிலம் அல்வார் தொகுதி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் பன்வாரிலால் சிங்கால் அடிக்கடி மாணவிகள் பலாத்கார சம்பவம் நடைபெறுவதை தடுக்க தனியார் பள்ளிகளில் பெண்களுக்கு சீருடையாக குட்டை பாவாடைக்கு தடைவிதிக்க வேண்டும். இதன்மூலம் ஆண்களின் ஆபாச பார்வையில் இருந்து மாணவிகள் தப்பிக்கலாம் என்று கூறியுள்ளார் தவறு நடப்பதற்கு ஆண் காரணமல்ல பெண்கள் அணியும் உடைதான் காரணம் என்பது போல் பேசியிருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

சத்தீஸ்கர் மாநில பா.ஜ.க. முதல்வர் ராமன்சிங் கூறுகையில் சாலை விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதற்கு காரணம் அழகான பெண்கள்தான் மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் பின்னால் அமர்ந்து செல்லும் அழகான பெண்களை பார்த்தாலே சாலையில் விபத்து ஏற்படுகிறது. இந்தியாவில் சாலை விபத்துக்கள் அதிகரிப்பதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு குறிப்பாக பல இடங்களில் சாலை மோசமானதாக உள்ளது. போக்குவரத்தை சரி செய்ய காவல்துறையில் மோதுமான ஆட்கள் இல்லை இதையெல்லாம் விடுத்து சாலை விபத்து ஏற்பட அழகான பெண்கள் சாலைகளில் செல்வதால்தான் விபத்து ஏற்படுகிறது என்று நாட்டின் முதல்வரே கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது,

**ஆன்மீகவாதிகள் பார்வையில்**

உலகம் முழுக்க ஆசிரமங்கள் வைத்துள்ள 71 வயது சாமியார் ஆசாராம் பாபு கூறியிருப்பது ஓடும் பஸ்சில் மிருக வெறி தாக்குதலின் போது அந்த டெல்லி மாணவி சரஸ்வதி மந்திரத்தை ஜெபித்திருந்தால் தப்பியிருக்கலாம், அப்படியும் அத்துமீறல் நடந்தால் மண்டியிட்டு கெஞ்சி தன்னை விட்டு விடுங்கள் அண்ணா என்று கதறியிருக்க வேண்டும். சம்பவம் நடந்த பொழுது அந்த பெண் அமைதியாக இருந்தது போல் மட்டமான கருத்துக்களை முன் வைத்துள்ளார். விட்டுவிடு என்றால் கயவர்கள் விட்டுவிடுவார்களா? காவி உடையில் பொறுப்பற்ற பேச்சுகளை உபதேசம் போல் சொல்லும் ஆசாமிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதே போல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பகவத் கூறுகையில் கணவன் - மனைவி உறவு என்பது ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுகிறது. ஒப்பந்தத்தை மீறினால் கணவன் மனைவியை கைவிடலாம் என்று ஆணாதிக்க போக்குடன் பேசியதோடு பாலியல் கொடுமை ஏற்படுவது நகர்புறங்களில்தான் - கிராமங்களில் நடைபெறவில்லை காரணம் மேற்கத்திய கலாச்சாரம் அதிகரித்துவரும் நகர்புறங்களில்தான் பாலியல் குற்றங்கள் அதிகரிக்கின்றன என்று கருத்து கூறியிருப்பது குறிப்பிட்ட பகுதியை சேர்ந்தவர்கள்தான் குற்றம் புரிகிறார்கள் என்ற பிரிவினையோடு பேசியிருப்பது பெண்களை இழிவுப்படுத்தும் செயலாகும்.

விஸ்வ ஹிந்து பரிஷித் அமைப்பின் தலைவர் அசோக் சிங்கால் இந்தியாவில் அண்மைக்காலமாக பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வருவதற்கு காரணம் மேற்கத்திய கலாச்சாரத்தை பின்பற்றுவதுதான் என்கிறார். இவர்களுடைய அகராதியில் பெண் உரிமை, பெண்ணின் சுயமரியாதை, பாலிய சமத்துவம் ஆகிய சிந்தனைகளும் மேற்கத்திய கலாச்சாரம்தான்.

**மதுரை ஆதினம் அருணகிரிநாதர்**

டெல்லி சம்பவம் குறித்து மதுரை ஆதினம் கூறுகையில் பெண்களுக்கும் சுயகட்டுப்பாடு வேண்டும் இஸ்லாமியப் பெண்கள் பர்தா அணிவது வழக்கம் கணவனைத் தவிர வேறு யாரும் தங்கள் உடலை கண்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் பர்தா அணிகின்றனர். இஸ்லாமிய பெண்களைப் போல இந்திய பெண்களும் பர்தா அணிய வேண்டும். இதன் மூலம் ஆண்களின் வக்கிரப் பார்வையில் இருந்து தப்ப முடியும் பாலியல் குற்றங்களை குறைக்க முடியும் என்று கூறியிருக்கிறார்.

ஆதினத்தின் பேச்சால் கொதிப்படைந்த மாதர்சங்கமும், வாலிபர் சங்கமும் ஒன்று திரண்டு ஆதின மடத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். மதுரை ஆதினம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனாலும் ஆதினம் தான் தவறான எண்ணத்தில் எதையும் கூறவில்லை நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு ஆடைகளும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். தமிழ் பெண்கள் மீதான தனிப்பட்ட அக்கறையில்தான் இந்த கருத்தை தெரிவித்தேன், நான் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை என்று கூறியிருக்கிறார்.

உடை கலாச்சாரம் என்ற பெயரில் பெண்களை ஒடுக்கும் வகையில் பெண் உரிமையையும், சுதந்திரத்தையும் பறிக்கும் விதத்தில் பேசிய மதுரை ஆதினத்தை பெண்கள் மன்னிக்க மாட்டார்கள்.

என்ன உடை அணிய வேண்டும் என்று பெண்களுக்கு மட்டுமே அறிவுரை கூறுவதற்கு அரசியல்வாதிகளுக்கும், ஆன்மீகவாதிகளுக்கும் யார் அதிகாரம் கொடுத்தது ஆண்கள் தங்கள் தவறான போக்கை, பார்வையை மாற்ற வேண்டும் என்று ஏன் அந்த அரசியல்வாதியும் - ஆன்மீகவாதியும் கேட்க வில்லை. 7 வயது குழந்தை முதல் 70 வயது பாட்டிவரை பாலியல் பிரச்சனையால் பாதிக்கப்படுவது உடையால்தானா? சிந்திக்க வேண்டும்.

இந்திய சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்கள் பல்வேறு விதங்களில் பாலின ஒடுக்குமுறைக்கு ஆளாகிறார்கள் - பெண்களுக்கு ஆதரவாக கள மிறங்க வேண்டிய அரசியல் கட்சிகள், அதிகாரிகள், ஆன்மீகவாதிகள் பெண்களுக்கு எதிரான பிற்போக்கான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

பெண்கள் மீதான குற்றங்கள் அதிர்ச்சி தரும் விதத்தில் பெருகி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கில் பெண்களுக்கு எதிரான வன்முறை குற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன பதிவு செய்யப்படாமல் எத்தனையோ.

ஆனால் இந்த தேசத்தை காப்பாற்றவே

அவதாரம் எடுத்ததுபோல மக்களை ஏமாற்றி வரும் அரசியல்வாதிகளும் - ஆன்மீகவாதிகளும் நாட்டில் பாலியல் கொடுமை ஏற்படுவதற்கு காரணம் பெண்கள் உடையில் கட்டுபாடு வேண்டும். அலங்காரம் செய்யக்கூடாது, வெளியில் நடமாடக்கூடாது என்றும் பர்தா அணிய வேண்டும் என்றும் தங்கள் மனதில் தோன்றுவதைக்கூறி பிற்போக்கான எண்ணத்துடன் பெண்களை காட்சிப் பொருளாக, நுகர்வுப் பொருளாக, அடிமையாக பாவித்து கருத்துக்களை வாரி வழங்கு கின்றனர்.

தினம் தினம் பாலியல் கொடுமைக்கு தள்ளப் படும் பெண்களும் - குழந்தைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் பாலியல் கொடுமைக்கு எதிராக வலுவான சட்டங்கள் வேண்டும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க விரைவு நீதிமன்றம் அமைக்க வேண்டும், கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

அரசியல் அமைப்பு சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் - அரசியல் வாதிகளும், ஆன்மீக வாதிகளும் மனம் மாற வேண்டும் குற்றங்களை தட்டிக்கேட்காவிட்டாலும் நியாயப்படுத்தாமல் இருக்க வேண்டும்.

ஊடகங்களும் சுயகட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் பாட திட்டங்களில் பெண் சமத்துவம், பாலின சமத்துவம் சேர்க்க வேண்டும், எத்தனை பெரியாரும், பாரதியும் பெண் அடிமைக்கு எதிராக பேசினாலும் பாலியல் வன்முறையற்ற சமூகத்தை படைப்போம் என்ற உறுதிமொழியை மக்கள் அனைவரும் மனதில் நிறுத்த வேண்டும். என்னதான் சட்டங்கள் இருந்தாலும் மன மாற்றம் மட்டுமே பெண்களையும், தேசத்தையும் பாதுகாக்கும்.

## மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணம் அளிக்க கோருவது சம்மந்தமாக வாரிய தலைவருக்கு எழுதிய கடிதம்

**பெறுநர்** நாள்: **8.1.2012**

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

**ஐயா,**

**பொருள் : பணியமைப்பு - நிர்வாகம் - மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு பண்டிகை முன் பணம் அளிக்க கோருதல் - சம்மந்தமாக.**

தமிழக மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு மற்ற நிரந்தர தொழிலாளிகளுக்கு அளிப்பதைப் போல பிடித்தம் செய்யும் பண்டிகை முன் பணம் அளிக்க கோருதல் சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கும் உடன் நடவடிக்கைக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

தமிழக மின் வாரியத்தில் சுமார் 5500க்கும் மேற்பட்ட பகுதி நேர ஊழியர்கள் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நிரந்தரம் செய்யப்பட்டு நிரந்தர ஊழியர்கள் என்று பர்மனெண்ட் எப்.பி டான்ஜெட்கோ புரசீடிங் எண். 11 நாள் 2.8.2011 அடிப்படையில் அவர்கள் நிரந்தர தொழிலாளர்கள் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான ஊதியமும் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களும் நிரந்தரத் தொழிலாளர்களாக கருதப்படுவார்கள் என்ற அடிப்படையில் மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கும் பிடித்தம் செய்யக்கூடிய பண்டிகை முன் பணம் வழங்குவதற்கான உத்தரவை வெளியிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் பகுதி நேர ஊழியர்களுக்கு பண்டிகை முன் பணமும் இதர ஊழியர்களுக்கு பண்டிகை முன் பணம் அளித்து பிடித்தம் செய்வதைப் போல இவர்களுக்கு அளிக்கும் பண்டிகை முன் பணத்தால் வாரியத்திற்கு எந்த நிதி இழப்பீடு இல்லை என்பதைச் சொல்லி இவைகளின் அடிப்படையில் பகுதி நேர ஊழியர்களுக்கு பண்டிகை முன் பணம் அளித்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உடன் நடவடிக்கை எடுத்து நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நிரந்தரத் தொழிலாளராக அறிவிக்கப்பட்டு பகுதி நேர ஊழியர்களுக்கும் பண்டிகை முன் பணம் அளித்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள

**(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

## ஈரோடு மின் உற்பத்தி வட்டத்தில் மேட்டூர் அணை மின் நிலையம் 75 ஆண்டுகள் நிறைவு பவள விழா கொண்டாடத்தையொட்டி அத்திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையும், நினைவு பரிசும், வழங்க வேண்டி வாரியத்திற்கு எழுதிய கடித நகல்

நாள்: **10.1.2013**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

**ஐயா,**

**பொருள் : பணியமைப்பு - ஈரோடு மின் உற்பத்தி வட்டம், மேட்டூர் அணை மின் நிலையம் 75 ஆண்டுகள் நிறைவு பவழ விழா கொண்டாட்டம் ஊக்கத்தொகை மற்றும் நினைவுப்பரிசு வழங்கிட வேண்டுவது. சம்மந்தமாக நினைவூட்டு கடிதம்.**

**பார்வை : 1) வாரிய நிலை ஆணை எண். 20 தொழிற்நுட்ப பிரிவு 12.1.2007.**
**2) மின் ஊழியர் மத்திய அமைப்பு கடித நாள் 28.3.2012.**

பார்வை இரண்டில் கண்ட எங்களது கடிதத்தில் ஈரோடு மின் உற்பத்தி வட்டம் மேட்டூர் அணை மின் நிலையம் துவங்கி 75 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள நிலையில் பவழவிழா கொண்டாட்டம் என்ற அடிப்படையில் அவ்வட்டத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வும் ஊக்கத் தொகை வழங்குவது சம்மந்தமாக ஏற்கனவே கடிதம் எழுதி இருந்தோம்.

மேட்டூர் அணை மின் நிலையத்தை பொருத்த வரையில் 1937 இல் துவங்கப்பட்டு ஜூன் 2012 இல் 75 ஆண்டு கால நிறைவு செய்துள்ளது. இதில் உள்ள 4 மின் உற்பத்தி இயந்திரங்களும் அதன் நிறுவு திறனான 10 மெகாவாட்டில் எந்த வித குறையும் இல்லாமல் செயல்பட்டு கடந்த 75 ஆண்டு காலமாக 9066.268 மில்லியன் அலகுகளை மின் உற்பத்தியை செய்து மின் பற்றாக்குறையை போக்க அரும்பங்கு ஆற்றி உள்ளது.

மேட்டூர் அணை மின் நிலையத்தின் சிறப்பான மின் உற்பத்திக்கு அங்கு பணி புரிந்த தொழிலாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொறியாளர்கள் அனைவரின் அரிய பணியினால் மட்டுமே இச்சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதை எங்களது கடிதத்தில் ஏற்கனவே சுட்டிக் காட்டி உள்ளோம்.

குந்தா மின் உற்பத்தி வட்டத்தில் உள்ள பைக்காரா மின் நிலையமும் 75 ஆண்டுகள் நிறைவு செய்து பவழ விழா கொண்டாடிய போது அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 1000/- மும் மற்றும் ரூ.500/- மதிப்புள்ள நினைவுப் பரிசு ஏற்கனவே வழங்கியுள்ளதை சுட்டிக்காட்டி மேட்டூர் அணை மின் நிலைய 75 ஆண்டு நிறைவு செய்து பவழ கொண்டாடுகின்ற நிலையில் அத்திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஆண்டு உயர்வு, ரொக்கப்பரிசு, போன்றவைகள் அளிப்பதன் மூலமாக சில லட்சம் ரூபாய்களே செலவாகும் என்பதையும் குறிப்பிட்டு அந்த அடிப்படையில் நாங்கள் கேட்ட கோரிக்கை நிறைவேற்ற வேண்டும் என்று 3. 2012 லேயே கடிதம் எழுதி அதன் பின்னர் பல முறை நேரில் பேசிய பிறகும் எங்களது இந்த நியாயமான கோரிக்கையின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை கவலையோடு குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம் அவர்கள் இக்கடிதத்தின் மீது உடன் நடவடிக்கை எடுத்து மேட்டூர் அணை மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வும், ஊக்கத் தொகை ரூ. 5000/-மும், ரூ. 1000/- மதிப்புள்ள நினைவுப் பரிசையும் வழங்கி அங்கு பணியாற்றும் ஊழியர்களை ஊக்குவிக்க வேண்டுமாள் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள
**(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

## தமிழக மின் வாரியம் அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது சம்மந்தமாக விளக்க வாரிய ஆணை.

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

(ABSTRACT)

Settlement under section 18(1) of the Industrial Disputes Act 1947 – Promotion avenues to the Regular Work Establishment employees of the Thermal Power Stations – Further orders – Issued.

(SECRETARIAT BRANCH)

(Per) CMD TANGEDCO Proceedings No.6, Dated the 7th January 2013.
Margazhi 23,
Thiruvalluvar Aandu-2043.
Read:

1) Settlement under Section 18(1) of the Industrial Disputes Act 1947 dt.26-3-2012.
2) (Per) FB TANGEDCO Proceedings No.18, (SB) Dated : 3-4-2012.
3) Memo. No.27318/A3/A31/2012-1, dt.23-4-2012.

**PROCEEDINGS:-**

Based on the Settlement under Section 18(1) of the Industrial Disputes Act, 1947, orders have been issued in the Board's Proceedings cited creating promotional avenues to the Regular Work Establishment employees working in all the four Thermal Power Stations.

2) It has been brought to the notice that while implementing the Board's Proceedings cited, certain difficulties have arisen and sought for clarificatory orders.

3) Accordingly, the following further orders are issued:-

i) The number of Technical Assistant/Tester Chemical shall be maintained at their sanctioned strength and the difference of 394 Nos. Technical Assistant/Tester Chemical between the sanctioned strength and

the available strength are revived in the four Thermal Power Stations as follows in addition to the already sanctioned strength in the Line Inspector equivalent categories having Rs.2,700/- Grade Pay:-

| Station | Technical Assistant | Tester Chemical | Total |
|---|---|---|---|
| M.T.P.S. | 46 | 21 | 67 |
| T.T.P.S. | 132 | 21 | 153 |
| E.T.P.S. | 64 | 19 | 83 |
| N.C.T.P.S. | 86 | 5 | 91 |
| | | **TOTAL** | **394** |

ii) The employees promoted consequent on the Board's Proceedings cited shall be allowed notional fixation with effect from the date of Settlement i.e. 26-3-2012 and the monetary benefit shall be given effect to from the date of their actual joining in the promoted post.

iii) The eligibility period of six months service for promotion from one post to another post, in the case of Lineman upgraded as Line Inspector equivalent category, shall be taken from the date of Settlement.

iv) 23 posts of Driver with the Grade pay of Rs.2,500/- are hereby created and the same quantity shall be reduced from the strength in the Rs.2,700/- Grade Pay category mentioned in Annexure-I of the Board's Proceedings cited as follows:-

| | | |
|---|---|---|
| Mettur Thermal Power Station | - | 7 |
| Tuticorin Thermal Power Station | - | 9 |
| Ennore Thermal Power Station | - | 5 |
| North Chennai Thermal Power Station | - | 2 |
| | | 23 |

v) In category-I Special Grade Foreman equivalent posts, Column-4 of Ennore Thermal Power Station in Annexure-II to the Board's Proceedings cited relating to creation of posts shall be read as 5 Nos. instead of 4 Nos.

(BY ORDER OF THE CHIARMAN CUM MANAGING DIRECTOR)

A.S. PASUPATHI
SECRETARY.

## மின் வாரியத்தில் காலியாக உள்ள மதிப்பீட்டு அலுவலர் பதவிகளை நிரப்பிடுவதில் கால தாமதத்தை தவிர்க்க வேண்டி தலைமை பொறியாளர் / பணியமைப்புக்கு எழுதிய கடிதம்

நாள்: **17.1.2013**

**பெறுநர்**
**தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : பணியமைப்பு - நிர்வாகம் மின் வாரியத்தில் காலியாக உள்ள மதிப்பீட்டு அலுவலர் பதவிகளை நிரப்பிடுவதில் காலதாமதத்தை தவிர்க்க கோருதல் - சம்மந்தமாக.**

**பார்வை : 1. Lr. No. 067748 / 926 / G 31 / G 311/ 2012-2. dt. 22.8.2012**
**2. Lr. No. 067748 / 926 / G 31 / G 311/ 2012-5. dt. 26.11.2012**

பார்வையில் கண்ட இரு கடிதங்களின் மூலம் வருவாய் மேற்பார்வையாளரில் இருந்து மதிப்பீட்டு அலுவலராக பதவி உயர்வு வழங்க தகுதி காண் அறிக்கையின் அடிப்படையில் உடன் பதவி உயர்வு வழங்குவது சம்மந்தமாக எங்களது கருத்துகளை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

மின் வாரியத்தில் காலி உள்ள மதிப்பீட்டு அலுவலர் பதவியை நிரப்பிட 22.8.2012 மற்றும் 26.11.2012 ஆகிய தேதிகளில் வருவாய் மேற்பார்வையாளரின் தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டு 4 மாதங்கள் என்பது கடந்த பின்னரும் வருவாய் மேற்பார்வையாளரின் தகுதி காண் பட்டியலை கேட்டுப் பெற்று பதவி உயர்வு அளிக்க துரிதமான நடவடிக்கை எடுக்கபடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி வருவாய் மேற்பார்வையாளரின் தகுதி காண் பட்டியலை விரைந்து பெற்று மதிப்பீட்டு அலுவலர் பதவி உயர்வு அளித்து காலி பணி இடங்களை நிரப்பிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளோரின் பட்டியலிலுள்ளவர்கள் வயது முதிர்வின் காரணமாக மதிப்பீட்டு அலுவலர் பதவி உயர்வு கிடைக்கப்ப பெறாமலேயே பணி ஓய்வு பெற்று செல்லும் நிலை கவலையளிக்கிறது. இம்மாதம் (ஜனவரி 2013) கூட 4 நபர்கள் ஓய்வு பெறவுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே தலைமைப் பொறியாளர், பணியமைப்பு அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து மதிப்பீட்டு அலுவலர் பதவிகளை உடன் நிரப்பிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள
**(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

# 1982 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த கணக்கீட்டாளர்களுக்கு முதல் ஒன்றரை ஆண்டு காலத்தையும் ஓய்வூதியம் கணக்கிட சேர்த்துக் கொள்ள வகை செய்யும் வாரிய உத்தரவு

TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION
(ABSTRACT)

Recruitment - Class III Service - Assessors appointed on contract basis by direct recruitment during the year 1982-83 - Counting of temporary service under contract period till 01.12.1983 for Pensionary benefits - Orders - Issued.

**(ADMINISTRATIVE BRANCH)**

(Per.) (CMD) TANGEDCO Proceeding No. 1, Dated 04.01.2013
Marghazhi 20, Nandana
Thiruvalluvar Aandu 2044.
Read :

1) B.P. MS (CH) No.637 (Adm.Branch) dated 01.12.1983.

**PROCEEDINGS.**

During 1982, the TANGEDCO (erstwhile TNEB) introduced a new system for billing and collection of energy charges with effect from 01.01.1982 in order to render better service to lakhs of consumers in billing and collection of electricity consumption charges. The new scheme for billing and collection of consumption charges was called as “Spot Billing Scheme”. One of the Unions representing the then Cashier Cadre (Now Assessor) had challenged the introduction of the new scheme in the Hon’ble High Court and obtained stay insofar as the members of the Union is concerned. As a result, there was shortage of man-power to implement the scheme. The Petitioner’s Union also filed Writ Petition challenging the new scheme on the file of the Hon’ble High Court and obtained order of stay. In view of the above, regular appointment could not be made to fill up the shortage of man-power. Hence, SC/ST candidates sponsored by the Director of Employment Exchange and Training for selection to the post of Cashiers (Now Assessors) against the back-log vacancies, were all considered for temporary appointment on contract basis as supernumerary “Assessors” during the year 1982-83 in the time scale of pay to meet the short-fall in the man-power requirement for implementing the new scheme. These Assessors were initially appointed on contract basis for a period not exceeding six months (i.e.) upto 30.11.1982. Later, on the tenure of Employment was extended in piece-meal for 2-3 months on each occasion and finally upto 31.01.1984. Subsequently, in B.P.Ms. (CH) No.637, (Administrative Branch), dated 01.12.1983, orders were issued for the creation of a new category of “Assessors” to provide regular appointment to the above
supernumerary Assessors working on contract basis with effect from 01.12.1983. Thus, the above contract period Assessors were regularly absorbed in Board’s service with effect from 01.12.1983.

2) The services of those Assessors recruited during the year 1982-83 were not taken into account for the purpose of calculation of pension, since they have not completed minimum years of qualifying service for pension. In order to make them qualify for claiming pension, several request have been received from the employees unions to count the temporary service rendered by them while calculating the net qualifying service.

3) After careful examination of the request of the above employees/ unions, the Chairman Cum Managing Director/TANGEDCO has approved that the services rendered by the Assessors who were appointed to fill up the backlog vacancies for SC/ST during 1982-1983 under contract period till 01.12.1983 (i.e. The date of their absorption into regular service), be taken into account for calculating net qualifying service so as to sanction pensionary benefits alone.

4) All the Pension Sanctioning Authorities are requested to revise the pension and pensionary

benefits in respect of the Assessors appointed during 1982-1983, duly counting the period of service rendered by them under Temporary service and to forward the revised pension proposal to the Chief Internal Audit Officer/Board Office Audit Branch/Chennai for authorising the same without giving any room for complaints in this regard.

5) The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR/TANGEDCO)**

sd./-xxxx
(R.SRINIVASAN)
CHIEF ENGINEER/ PERSONNEL

## மின்வாரிய பகுதி நேர ஊழியர்களுக்கு 2011 - 12 ஆம் ஆண்டு போனஸ் மற்றும் கருணைத் தொகையை நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கியதைப் போல் வழங்கிட வேண்டி வாரியத்திற்கு அளித்த நினைவூட்டு கடிதம்

நாள்: **4.1.2012**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

**ஐயா,**

**பொருள் : பணியமைப்பு - மின்வாரிய பகுதி நேர ஊழியர்களுக்கு 2011-12 ஆம் ஆண்டு போனஸ் மற்றும் கருணைத் தொகை வாரிய உத்தரவு - (பர்) சி.எம்.டி. டான்ஜெட்கோ நடைமுறைகள் எண். 116 நாள் 7.11.2012 கீழ் 20 சதம் வழங்கிடுவதற்கான உத்தரவினை அளித்திட நினைவூட்டல் கடிதம் அளித்தல் சம்மந்தமாக.**

**பார்வை : எங்களது சங்க கடிதம் நாள் 8.11.2012**

தமிழக மின்சார வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை அவர்கள் பெறுகின்ற ஊதியத் தொகையில் 20 சதம் வழங்கிடாமல் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை அளிப்பதன் அடிப்படையில் வழங்கப்பட்டது மாற்றியமைத்திட வேண்டுமென்று பார்வையில் உள்ள 8.11.2012 தேதியிட்ட கடிதம் மூலம் முறையிட்டிருந்தோம்.

அதன் மீது தாங்கள் இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் நினைவூட்டல் கடிதத்தை சமர்ப்பிக்கின்றோம்.

பகுதி நேர ஊழியர்கள் 1998 ஆம் ஆண்டு வாரிய உத்தரவு பர்மனென்ட் பி.பி. எண். 95 செகரட்டேரியட் பிராஞ்ச் தேதி 14.10.1998 ன் படியும், வாரிய உத்தரவு பர்மனென்ட் எப்.பி. டான்ஜெட்கோ புரசிடிங் எண். 11/ எ.டி.எம். பிராஞ்ச் 2.8.2011 படியும் வாரியத்தின் நிரந்தரத் தொழிலாளர்களாக பணி விதிகள் டிவிஷன் 2 வகுப்பு 4 ன் கீழ் கொண்டு வரப்பட நடவடிக்கை வாரியத்தால் உத்தரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் 1.4.2003 முதல் பகுதி நேர ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு அதற்கான நிலுவைத் தொகையும் வழங்கப்பட்டது.

எனவே 1.4.2003 முதல் காலமுறை ஊதியம் பெற்று வாரியத்தின் தொழிலாளியாக நியமனம் செய்யப்பட்டார்கள்.

ஆனால் பகுதி நேர ஊழியர்களுக்கு 2011-12 ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத்தொகை 20% வழங்கிடாமல் ரூ.1500/- கருணைத் தொகை மட்டுமே வாரியத்தால் வழங்கப்பட்டது என்பது பகுதி நேர ஊழியர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய போனஸ் மற்றும் கருணைத் தொகை மறுக்கப்பட்டுள்ளது.

இது போனஸ் சட்டம் 1965 ன் படியும் தவறான ஒன்றாகும்.

எனவே தாங்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு நிரந்தரத் தொழிலாளர்களாக 1.4.2003 ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களுக்கு அளித்த போனஸ் மற்றும் கருணைத் தொகை உத்தரவுப்படி 20 சதம் அளித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகின்றோம்.

இப்பிரச்சினையில் பகுதி நேர ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயத்தை வாரியம் செய்யும் என்று நம்புகின்றோம்.

# மின்வாரிய ஊழியர்களின் வேலை பளு சம்மந்தமாக ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுக்கள் சம்மந்தமான வாரிய உத்தரவு

**TAMIL N ADU GENERATION & DISTRIBUTION CORPORATION LIMITED**

**(ABSTARCT)**

Work Load - Consititution of Sub-Committees for Work Load areas - Orders - Issued.

(SECRETARIAT BRANCH)

(Per) CMD TANGEDCO Proceedings No.252, Dated the 21st November, 2012
Karthigai 6,
Thiruvalluvar Aandu-2043.

**Read:**

1) (Per) CMD TANGEDCO Proceedings No.259, (SB) Dated : 16-12-2011.

2) (Per) CMD TANGEDCO Proceedings No.207, (SB) Dated : 31-8-2012.

**PROCEEDINGS:-**

In the Board's Proceedings cited, the TANGEDCO had constituted a Committee to negotiate with the Unions/ Associations on revision of pay scales, work allocation and Staff pattern to take effect from 1-12-2011.

2) It was suggested to form Working Groups consisting of the Officers of the TANGEDCO to assist the Wage Revision Committee to achieve economy in expenditure by rationalising and revising the work loads in respect of the areas, which are already covered by Work Load settlements.

3) Accordingly, four Working Groups are constituted and the following Officers are nominated as Members of the Working Groups to suggest suitable proposal and to submit a report.

**i) Revenue Accounting Staff ii) Assessment and Collection Staff in Distribution Circles:-**

1) Th. M. Manoharan, Chief Financial Controller / Revenue.
2) Th. S. Shanmugam, Superintending Engineer / CEDC / North / Chennai.
3) Th. B.K. Munusamy, Executive Engineer / O & M / Ambattur.
4) Th. Kumar, Deputy Financial Controller / Erode.
5) Th. S.D. Siddhardhan, Assessment Officer, O/o. Executive Engineer / O & M / Mylapore.

The above Sub-Committee will suggest the revised work norms in respec of Meter Reading, Assessment, Collection and Revenue works of Assessors, Inspectors of Assessment, Revenue Supervisors and Assistant Accounts Officers of Revenue Unit and other interconnected works. The Sub - Committee will also look into the existing system / procedure in assessment / collection / accounting / checking and suggest methods to improve the System.

**iii) Field staff in Distribution Circles:-**

1) Th. V.G. Manoharan, Chief Engineer / P&C / Chennai and M.D./ TANTRANSCO (I/c.)
2) Th. S. Eswarasubramanian, Superintending Engineer / Madurai EDC.
3) Th. G. Gnanasambandam, Executive Engineer / O & M / Porur
4) Th. R. Thangadurai, Executive Engineer / O&M / Cuddalore
5) Th. K. Venkatesan, Executive Engineer / O & M / Corridor.

The above sub - committee will suggest suitable revised work norms in respect of the Regular Work Establishment employees working in Distribution Circles.

iv) Stores staff in Distribution Circles:-

1) Th. T. Senthilvelan, Superintending Engineer / Operation / Salem.
2) Th. G. Rajendran, Stores Controller / Headquarters/Chennai.
3) Th. C. Selvaraj, Chief Stores Officer / Headquarters/Chennai.

The above sub - committee will suggest suitable revised work norms in respect of the Store staff working in Distribution Circles.

4) The Members of the Working Groups will examine and suggest suitable revised workload standards and submit their reports to the Chairman / Wage Revision Committee on or before 15-01-2013 based on which the Wage Revision Committee will hold negotiations with Unions / Associations.

A.S. PASUPATHI
SECRETARY

## வாழ்த்துகிறோம்



தூத்துக்குடி மின்பகிர்மான வட்டக் கிளையின் மூத்த தோழரும், மெய்ஞானபுரம் விநியோகப் பிரிவில் வருவாய் மேற்பார்வையாளராகப் பணியாற்றி 31.8.2012 அன்று பணி ஓய்வு பெற்ற தோழர் **எம். ஜெயபாண்டியன்** அவர்கள் மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- அளித்தார். வாழ்த்துக்கள்



பெரம்பலூர் வட்டக் கிளையை சேர்ந்த தோழர் எம். பன்னீர் செல்வம் அவர்களுக்கு அரசியல் தலையீட்டை அப்புறப்படுத்தி ஆக்கமுகவர் சிறப்புநிலை பதவி உயர்வை பெற்றுத்ர தந்து பெரம்பலூர் நகர் பிரிவிற்கு உத்தரவு வழங்க முயற்சி எடுத்தமைக்கு மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- அளித்தார் வாழ்த்துக்கள்



ஈரோடு மின் உற்பத்தி வட்டத்தில் நெரிஞ்சிப் பேட்டை பேரேஜ் மின்நிலையம் 2 இயந்திரவியல் பிரிவில் சீனியர் மெக்கானிக் இரண்டாம் நிலையாக பணியாற்றி வந்த நமது சங்க உறுப்பினர் தோழர் எஸ். செல்வராஜ் அவர்கள் வயது மூப்பு காரணமாக வாரிய பணியிலிருந்து 31.08.2012 அன்று ஓய்வு பெற்றார். மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 300/- அளித்தார். (வி. கிருஷ்ணன் மூலமாக)

### டிசம்பர் மாத மின்கதிரில் பிரசுரிக்கப்பட்ட புனல் மின் நிலைய தீர்மானத்தில் சில திருத்தம்

புனல் மின்நிலையங்களில் பணிபுரியும் களப்பிரிவு தொழிலாளர்களுக்கு கல்வி தகுதியை முற்றிலும் நீக்கி பதவி உயர்வு வழங்கிட வேண்டும். மேலும் பதவி உயர்வு வழங்கிட தேவையான புதிய பதவிகளை உருவாக்கி பதவி உயர்வுகள் வழங்கிட வேண்டும். மேலும் நிர்வாகத்தால் அமைக்கப் பட்ட பதவி உயர்வு கமிட்டியை உடனே கூட்டி இவைகளுக்கு தீர்வு காண வேண்டும் பதவிகளை ரத்து செய்து ஆட்குறைப்பு செய்வதை கைவிட்டு புதிய புனல் மின்நிலையங் களுக்கு தேவையான பதவி களை அனுமதிக்க வேண்டும்.

### மண்டலக்குழு கூட்டங்கள்

மத்திய அமைப்பின் 14வது மாநில மாநாட்டிற்கு பின்னர் திருச்சி மண்டலத்தைத் தவிர மற்ற 8 மண்டலங்களும் குறுகிய காலத்திலேயே மண்டல கூட்டங்களை நடத்தி அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள் கிளைகளுக்கு பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## ஆரிசன் எழுதிய கவிதை நூல் பல்கலை கழகத்தில் பாடநூலானது

### மத்திய அமைப்பின் வாழ்த்துக்கள்

மத்திய அமைப்பின், திருவண்ணா மலை கிளையின் பொருளாளர் **ஆரிசன்** என்று அழைக்கப்படும் தோழர் **ஆ. பெருமாள்**, வருவாய் மேற்பார்வையாளர் அவர்கள் எழுதிய **“குளத்தில் மிதக்கும் தீபங்கள்”** ஹைகூ கவிதை நூல் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் பாட நூலாக இடம்பெற்றுள்ளது. இளங்கலை தமிழ் இலக்கியம் முதலாமாண்டுக்கான இரண்டாம் பருவகால படிப்புக்கு இந்நூல் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது.

முதுகலை தமிழ் இலக்கியம், தற்கால தொழில் நுட்பம் மற்றும் ஊடகவியலில் முதுகலைப் பட்டம், டி.கோப், டி.எ.எஸ்.ஸி என பட்டயப் படிப்புகளையும் படித்துள்ளார்.

இவரது. . . .

**குளத்தில் மிதக்கும் தீபங்கள்,**<br>
**நட்சத்திர தாகம்,**<br>
**உயிர்நிலம்**

ஆகிய நூல்கள் சென்னை பல்கலைக் கழகத்தில் எம்ஃபில் ஆய்வுக்காகவும் இவரது நூல்களை சில ஆய்வாளர்கள் தேர்ந் தெடுத்துள்ளனர்.

நூலாசிரியர் கவிஞர் ஆரிசன் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநிலக்குழு மற்றும் மின் இலக்கிய பூங்கா கலை இலக்கிய அமைப்பில் மாநில இணைச் செயலாளராக இருந்து இலக்கிய பணியாற்றி வருவதும் குறிப்பிடத் தக்கது.

## சாகித்ய அகாடமி விருதுபெற்ற தோழர் டி. செல்வராஜ் அவர்களுக்கு



### மத்திய அமைப்பின் வாழ்த்துக்கள்

தோழர் டி.செல்வராஜ் அவர்களின் “தோல்” நாவலுக்கு 2012 ஆம் ஆண்டு சாகித்ய அகடமி விருது வழங்கப்பட்டுள்ளது. வாழ்த்துக்கள்

தோழர் டேனியல் செல்வராஜ் 1938 ஜனவரி 14 ல் திருநெல்வேலி மாவட்டம் மாவடி கிராமத்தில் தோட்டத் தொழிலாளியின் மகனாக பிறந்தார். 1959 பட்டப் படிப்பை திருநெல்வேலியிலும், 1962 ல் சட்டப்படிப்பை சென்னையிலும் முடித்தார்.

படிக்கும் போதே முற்போக்கு இலக்கியங்கள் மீது ஆர்வம் கொண்டு படித்தார், எழுதினார். அவருடைய முதல் படைப்பு 1957ல் டி.எம். சிதம்பரநாதனை ஆசிரியராக கொண்டு வெளிவந்த சாந்தி இதழில் வெளி வந்தது. தொடர்ந்து அவரது படைப்புகள் நீதி, செம்மலர், தாமரை மற்றும் கண்ணதாசன் ஆகிய இலக்கிய இதழ்களில் வெளி வந்தது.

1967 ல் வெளி வந்த மலரும் - சருகும் என்னும் நாவல் மூலம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். திருநெல்வேலி மாவட்ட விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டத்தை விவரிக்கும் இந்நாவல் முதல் தலித் நாவல் என்றும் பேசப்பட்டது.

தொடர்ந்து தேனீர், மூலதனம், அக்னிகுண்டம், யுக சங்கமம் என்பன போன்ற நாவல்களும் - நாடகங்களும் தோழர் டி. செல்வராஜ் படைப்பில் உருவானது.

யுக சங்கமம் எனும் நாடகம் தமிழக அரசின் விருது பெற்றது. சாகித்ய அகடமி விருதுபெற்ற தோல் நாவலும் தமிழக அரசின் விருது பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தோல் நாவல் தோழர் டி. செல்வராஜ் அவர்களின் 10 ஆண்டுகால உழைப்பில் உருவானது. திண்டுக்கல் தோல்பதனிடும் - தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாழ்நிலையை நாவலாக படைத்துள்ளார். வழக்கறிஞர் தொழிலுக்காக திண்டுக்கல் வந்தவர் தோல் நாவலுக்காக தொழிலையே மாற்றிக்கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.



# மருத்துவப் பகுதி

## மாம்பழம்

சின்னக் குழந்தைகளுக்கு சாப்பாட்டுக்குப் பின்னர் தான் மாம்பழம் தரலாம். மாம்பழம் சாப்பிட்ட குழந்தைகளுக்கு உணவில் சிறிது நெய் சேர்த்துத்தர வேண்டும். இரவில் பாலும் கொடுக்க வேண்டும்.

## நெய், மோர் சாப்பிட....

தினந்தோறும் நெய்யை உருக்கித் தான் உணவுக்குப் பரிமாற வேண்டும். தாகத்திற்கு மோர் பருகும் போது, நீர் மோராக்கித்தான் பருக வேண்டும். நெய்யுருக்கி, மோர் பெருக்கி நீர் சுருக்கி வாழ்ந்தால் ஆரோக்கியம் தான்.

## முடி செம்பட்டையா?

செம்பட்டை முடி உள்ள பெண்கள், தினமும் தேங்காய்ப் பால் தடவி குளித்து வந்தால் காலப்போக்கில் செம்பட்டை நிறம் மாறும். ஆலிவ் எண்ணெய்யை தேய்த்து மசாஜ் செய்து வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.

## பூண்டு

தினந்தோறும் சமையலில் பூண்டு சேர்க்க மறவாதீர்கள். வாயுத் தொந்தரவை பூண்டு கட்டுப் படுத்தும். காசநோயை மட்டுப் படுத்தும். சுவாசக் கோளாறுக்கு அரு மருந்து. ரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவையும் பூண்டு கட்டுப்படுத்தும்.

## வாழைத்தண்டு

வாழைத்தண்டு மலச் சிக்கலைப் போக்கும், சிறுநீரக கற்களை கரைத்து வெளியேற்றும். நீரழிவு நோயால் பாதிக்கப் பட்டுள்ளவர் களுக்கு அடிக்கடி சிறுநீர்ப்பிரியும் அல்லவா? அத்தகையவர்கள் வாழைத் தண்டை சமைத்து சாப்பிட்டால் நீர்ப்பிரிவு கட்டுப்படும்.

## தேமல் மறைய

முகத்தில், கழுத்தில் தேமலா? வேப்பிலையை நன்றாக அரைத்து அதன் சாற்றை எடுத்து தினமும் ஒரு ஸ்பூன் அளவுக்கு பருகி வர தேமல் நாளடைவில் மறைந்து விடும்

## கால்களில் பித்த வெடிப்பா?

வேப்பிலை, மஞ்சள், மருதாணி ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து அரைத்து பித்த வெடிப்பு தோன்றும் போது, காலை நன்றாக வென்னீரில் கழுவி சுத்தமான துணியால் துடைத்துவிட்டு, போட்டு வர வேண்டும் இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் பித்த வெடிப்பு சரியாகிவிடும்.

## இளநரையா?

இளநரை ஒரு தொல்லை, இதிலிருந்து மீள நல்லெண்ணை யுடன்நெல்லிக்காய் சாற்றை கலந்து சூடாக்கி தேய்த்து குளித்து வாருங்கள். இளநரையைத் தடுக் கலாம். இதே போன்று கரிசலாங் கண்ணி சாற்றினை தேங்காய் எண்ணையில் கலந்து தேய்த்து வர இளநரை போய்விடும். வயதானா லும் நரை வருவதை தடுக்க முடியும்.

## குழந்தைகளுக்கு நல்லது கொய்யாப்பழம்

வளரும் குழந்தை களுக்கு தாய்மார் கொய்யாப் பழத்தை அடிக்கடி தர வேண்டும். அடிக்கடி கொய்யாப் பழம் சாப்பிடுகிற போது அவர்களின் எலும்புகள் உறுதியடையும். கொய்யாப் பழத்தில் கிருமிகளைக் கொல்கிற சக்தியும் இருக்கிறது. சொறி சிரங்குக்கு கொய்யாப்பழம் அற்புதமான நிவாரணி ஆகும். ரத்த சோகையையும் கொய்யப்பழம் நீக்குகிற ஆற்றலைக் கொண்டிருக் கிறது.

கொய்யா இலையும் மருத்துவத் தன்மையை கொண்டுள்ளது பசிதாகம் இல்லாதவர்கள் கொய்யா இலைகளில் கொழுந் தானவற்றை தேர்ந்தெடுத்து அவற்றில் மூன்றை எடுத்து இத்துடன் அரை டீஸ்பூன் சீரகம், உப்பு இவற்றை மை போல அரைத்து சாப்பிட்டு ஒரு டம்ளர் வென்னீர் குடிக்க வேண்டும். இதையடுத்து நல்ல பசி தாகம் உண்டாகும்.

கொய்யாவின் வேர்ப் பட்டை கசாயம் குழந்தை களுக்கு உண்டாகும் இடை விடாத வயிற்றுப் போக்குக்கு நல்ல நிவாரணத்தை தரும்.

ஆசிரியரும், வெளியிடுபவரும் எஸ். எஸ். சுப்பிரமணியன், எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை-5,
போன் 2854 85 29. அச்சிட்டோர் பாட்டாளிகள் அச்சகம், பெரம்பூர், சென்னை 600 012. போன் 2663 37 71

Registration Number TN/CH/(C)/189/12-14
Licence to Post Without Prepayment TN/PMG(CCR)WPP- 311/2012-2014
Registrar News Paper of India No.30504/77 Date of Posting 3&4

